


34ஆவது ஆண்டில்
# விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059 · www.vlambaram.com
email: vlambaram@sympatico.ca · www.tamilvanakkam.com




நதி: 33 · பாலம்: 24 · சமூக முன்னேற்றப்பத்திரிகை · மாதமிருமுறை · இலவசம் · JANUARY 01, 2024

# ஐக்கிய நாடுகளின் காலநிலை மாற்ற மாநாடு

ஐக்கிய நாடுகளின் 2023ஆம் ஆண்டிற்கான காலநிலை மாற்ற மாநாடு நொவெம்பர் 30ஆம் திகதி முதல் டிசம்பர் 13ஆம் திகதிவரை ஐக்கிய அரபு இராச்சியத்தில் (United Arab Emirates) துபாயில் (Dubai) உள்ள எக்ஸ்போ நகரில் (Expo City) நடைபெற்றது.

காலநிலை மாற்றத்திற்கான ஐக்கிய நாடுகளின் கட்டமைப்பு மாநாடு (The United National Framework Convention on Climate Change) UNFCCC என அழைக்கப்படும். இது காலநிலை அமைப்பில் ஏற்படுத்தப்படும் ஆபத்தான மனிதத் தலையீட்டை எதிர்த்து போராடுவதற்கு ஒரு சர்வதேச சுற்றுச் சூழல் ஒப்பந்தத்தை 1992 ஜூன் மாதத்தில் ஏற்படுத்தியது. இந்த ஒப்பந்தத்தை ஏற்று 154 அரசுகள் கையொப்பம் இட்டிருந்தன. இந்த ஒப்பந்தம் 1994 மார்ச் மாதத்தில் அமலுக்கு வந்தது. இந்த 154 அரசுகளினது மாநாடு ஆண்டுதோறும் நடைபெற்று வருகின்றன. 2020ஆம் ஆண்டில் மட்டும் கோவிட்-19 தொற்று நோய் பரவல் காரணமாக இம்மாநாடு நடைபெறவில்லை. இம்மாநாடு UNFCCC இன் கட்சிகளின் மாநாடு (Conference of the Parties of UNFCCC) என சுருக்கமாக அழைக்கப்படும். 2023ஆம் ஆண்டில் நடைபெற்ற 28ஆவது மாநாடு COP28 எனக் குறிப்பிடப்படுகிறது.

ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெற்ற COP28 மாநாட்டிற்கு அபுதாபி தேசிய எண்ணெய் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி (CEO)ஆன சுல்தான் அல் ஜாபர் (Sultan Al Jaber) தலைமை வகித்தார். 1973 ஓகஸ்ற் 31இல் ஐக்கிய அரபு இராச்சியத்தில் பிறந்த அல் ஜாபர், இரசாயன பொறியியலாளர் பட்டப்படிப்பை Southern California பல்கலைக்கழகத்திலும், முனைவர் பட்டத்தை வணிகம் மற்றும் பொருளாதாரத்துறையில் Coventry பல்கலைக்கழகத்திலும் (UK). MBA பட்டத்தை Los Angelesஇல் உள்ள California State Universityஇலும் பெற்றுள்ளார்.

அல் ஜாபர் COP28 மாநாட்டிற்குத் தலைமை வகிப்பார் என UAE 2023 ஜனவரியில் அறிவித்தபோது பல நாடுகளும் நிறுவனங்களும் அவரது தலைமைக்கு தமது எதிர்ப்பைத் தெரிவித்திருந்தன. ஓர் எண்ணெய் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி புதைபடிவ எரிபொருளைப் படிப்படியாக பாவனையில் இருந்து நீக்குவதற்குரிய நடவடிக்கைகளை எடுக்கவிருக்கும் COP28 மாநாட்டிற்குத் தலைமை வகிக்கப் பொருத்தமானவர் அல்ல எனத் தெரிவித்திருந்தன.

COP28 மாநாடு முதலில் டிசம்பர் 12ஆம் திகதி முடிவடையும் எனத் திட்டமிடப் பட்டிருந்தது. ஆனால், மாநாட்டு இறுதி அறிக்கைக்கு சவுதி அரேபியா ஆட்சேபனை தெரிவித்தபடியால், மாநாடு டிசம்பர் 13ஆம் திகதிவரை நீட்டிக்கப்பட்டது.

டிசம்பர் 13ஆம் திகதி COP28 மாநாட்டின் தலைவர் அல் ஜாபர் எல்லா நாடுகளும், ஏற்றுக் கொள்ளப்பட்ட இறுதி அறிக்கையை வெளியிட்டார். இந்த அறிக்கையில், “காலநிலை மாற்றத்தின் மோசமான விளைவுகளைத் தணிக்கவும், 2050ஆம் ஆண்டிற்குள் கார்பன் வெளியீட்டில் நிகர பூச்சிய நிலையை (Net Zero) அடையவும் நியாயமான, ஒழுங்கான மற்றும் சமமான முறையில் (Orderly and equitable manner) கார்பன் எரிபொருட்களில் தங்கியிருப்பதில் இருந்து விலகிச் செல்ல இதில் கையொப்பம் இட்டுள்ள அனைத்து நாடுகளும் உறுதி பூண்டுள்ளன”, எனக் கூறப்பட்டுள்ளது.

அனைத்துவகையான புதைபடிவ எரிபொருட்களிலிருந்தும் விலகிச் செல்ல வேண்டிய அவசியத்தை COP உச்சிமாநாடுகளின் வரலாற்றில் இம்முறையே முதன்முதலில் வெளிப்படையாக ஓர் உலக ஒப்பந்தத்தில்

தொடர்ச்சி 05 பக்கம்






சட்டச் சேவை
• டிராஃபிக் டிக்கெட்டால் சட்டப்பிரச்சினையா?
• நீங்கள் Truck driver என்பதால் வாகனப் போக்குவரத்து சட்டச் சிக்கலில் மாட்டி தவிக்கிறீர்களா?
• Assault, Theft போன்ற கிரிமினல் வழக்கு சட்டப் பிரச்சினையா?
அழையுங்கள்: Licensed Paralegal
வினோத்குமார், BA LLB LLM Candidate
(Osgoode Law School) 647–766–5189










தைப்பொங்கல் திருநாள் வாழ்த்துகள்
நீங்கள் நல்ல ஆரோக்கியத்துடனும்,
அமைதி மற்றும் செழிப்புடனும் வாழ வாழ்த்துகின்றேன்.
இனிய தைப்பொங்கல் வாழ்த்துகள்!
May the blessings of Thai Pongal
Leave you in good health,
Peace and prosperity.
Happy Thai Pongal!
Member of Parliament | Scarborough North
SHAUN CHEN
4386 Sheppard Avenue East, Unit E
Scarborough, Ontario M1S 1T8
416-321-CHEN (2436)
info@shaunchen.com
ShaunChenMP
@shaunchenmp
@Shaun_Chen
www.shaunchen.com



Available Till Midnight
Including Weekends & Holidays

ANTON
DHARMASEELAN
MORTGAE AGENT

#1 Mortgage Agent in GTA
#2 in Canada

CALL ME FIRST
FOR ALL YOUR MORTGAGE NEEDS

PURCHASE
REFINANCE
SELF EMPLOYED
BAD CREDIT
INVESTMENT PROPERTY
RENEWAL

MAJOR BANKS
ALTERNATIVE LENDERS
B LENDERS
CREDIT UNIONS
TRUST COMPANIES
PRIVATE LENDERS

416 704 1200

anton@myhomemls.ca

MORTGAGE ALLIANCE
Broker # 10530
#200, 2005 Sheppard Ave. E.
Toronto, ON M2J 5B4

FAX: 1 866 566 3068

# உலகத் தமிழர் பேரவையின் 'இமாலய முயற்சி' குறித்த கேள்விகள்!




உலகத் தமிழர் பேரவையின் தூதுக்குழுவினர் இலங்கைக்கு வருகை தந்து, டிசெம்பர் 07ஆம் திகதி தொடக்கம் 15ஆம் திகதிவரை நாட்டில் பலவேறு சந்திப்புகளை மேற்கொண்டிருந்தனர். பௌத்த மதபீடங்களைச் சேர்ந்த மூத்த பௌத்த பிக்குகளும் இதில் இணைந்திருந்தனர்.

ஜனாதிபதி, எதிர்க்கட்சித் தலைவர், பெரும்பாலான தேசிய அரசியல் கட்சிகளின் தலைவர்கள் மற்றும் தமிழ், மலையகத் தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் முக்கியமான அரசியல் தலைவர்கள், முன்னாள் ஜனாதிபதிகள், முன்னாள் சபாநாயகர் ஆகியோரை, இக்குழுவினர் சந்தித்து உரையாடியுள்ளனர். இந்து, கிறிஸ்தவ, முஸ்லிம் மதத் தலைவர்களையும் இவர்கள் சந்தித்துள்ளனர்.

'இமாலயப் பிரகடனம்' அறிமுகப்படுத்தப் பட்டதையடுத்து தொடர்ச்சியான நடவடிக்கையாக இலங்கையில் உள்ள அனைத்து சமூகங்களுக்கும் இடையிலான தேசிய உரையாடல் காத்திரமாக முன்னெடுக்கப் பட்டுள்ளதாக உலகத் தமிழ் மக்கள் பேரவை தெரிவித்துள்ளது. இவ்'இமாலயப் பிரகடனம்' தொடர்பாக தாயகத்தில் வாழும் சாதாரண தமிழ் மக்கள் இதற்கு முன்னர் அறிந்திருக்கவில்லை.

கடந்த ஏப்ரல் 2023இல் நேபாளம் நாகர்கோட்டில் மேற்கொள்ளப்பட்ட உரையாடலின் தொடர்ச்சியாக 'இமாலயப் பிரகடனம்' உருவாக்கப்பட்டதாகவும் அந்த 'இமாலயப் பிரகடனம்' இலங்கை யில் உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டு அனைத்துத் தரப்பினரதும் உயர்பீடங்களையும் சந்தித்து, ஒப்படைக்கப்பட்டுக் கலந்துரையாடப்பட்டுள்ளதாகவும் உலகத் தமிழர் பேரவை வெளியிட்டுள்ள நீண்ட விளக்க அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. தங்களது இந்த முயற்சிக்கு எதிரான



விமர்சனங்கள், கருத்துக்களுக்கும் அறிக்கையில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. எனினும், தமிழ் தேசியக் கூட்டமைப்பு தவிர்ந்த தமிழ் தேசியக் கட்சிகள் உலகத் தமிழர் பேரவையின் செயற்பாடுகளை விமர்சித்துள்ளதுடன், கடுமையான எதிர்ப்பையும் வெளியிட்டுள்ளன.

உலகத் தமிழர் பேரவையும், கனடிய தமிழ் காங்கிரஸும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஸவுடன் சந்தித்து கலந்துரையாடியமைக்கு கனடிய அமைச்சரான ஹரி ஆனந்தசங்கரி கண்டனம் வெளியிட்டுள்ளார்.

தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட பாரிய மனித உரிமை மீறல்களுக்காக மஹிந்த ராஜபக்ஸ மற்றும் கோட்டாபய ராஜபக்ஸ ஆகியோர் மீது 2023ஆம் ஆண்டு ஜனவரி மாதம் கனடிய அரசு தடைகளை விதித்தமையையும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

தமிழருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட போர்க் குற்றங்கள், இனப்படுகொலை என்பவற்றிற்கான பொறுப்புக் கூறலை வலியுறுத்தி பல வருட போராட்டத்திற்கு பின்னரே இந்த தடை விதிக்கப்பட்டதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

பாதிக்கப்பட்டவர்கள், சமூக அமைப்புகள், மற்றும், தமிழர்களுடன் கலந்தாலோசிக்காது மேற்கொள்ளப்படும் இந்த முயற்சி பாரிய தவறு என்றும் ஹரி ஆனந்தசங்கரி கண்டனம் வெளியிட்டுள்ளார். தாயகத்தில் வாழும் தமிழ் மக்களின் நலன்களுக்காக செயற்படுவதாக இந்த அமைப்புகள் கூறுவதன்மீது இருந்த நம்பிக்கையை இது இழக்கச் செய்துள்ளதாகவும் ஹரி ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

சுமந்திரன், சம்மந்தன் வழியில் ஒற்றையாட்சியை பலப்படுத்தி அதற்குள் தமிழர்களை கொண்டு சென்று புதைத்து, எதிர்காலத்தை இல்லாமல் செய்வதும், 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த கோருவதும், இலங்கை அரசை ஒரு நியாயமான அரசாக காட்டுவதும்தான் இவர்களது நோக்கம் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி குற்றம்சாட்டியுள்ளது.

உலகத் தமிழர் பேரவையும் தமிழ் தேசிய கூட்டமைப்பினரும் கடந்த 14 வருடங்களில் குறைந்தது 12 வருடங்கள் ஒன்றாக ஐ.நா மனித உரிமைகள் பேரவையிலும் மற்றும் பல இராஜதந்திர மட்டங்களுக்கும் சென்று தமிழ் மக்களின் எதிர்காலத்தை குழிதோண்டி புதைக்கும் பல காரியங்களை செய்துள்ளதாகவும், சர்வதேச விசாரணையை உள்ளக விசாரணையாக முடக்குகின்ற சுமந்திரனது செயற்பாடுகளுக்கு இந்த உலகத் தமிழர் பேரவை முழுமையாக பக்க பலமாக இருக்கின்றது என்றும் அக்கட்சி தெரிவித்துள்ளது.

வவுனியாவில் சில தினங்களுக்கு முன்னர் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் உலகத் தமிழர் பேரவையின் உறுப்பினர்களின் புகைப்படம் தாங்கிய பதாகையின் மீது முட்டை வீசி தமது எதிர்ப்பினை வெளிப்படுத்தி இருந்தனர்.

விகாரைகள் ஆக்கிரமிக்கின்றன. வடக்கு கிழக்கில் தொல்பொருள் திணைக் களத்தின் ஆக்கிரமிப்பும் தொடர்கின்றது.

இந்த நிலையில், இலங்கை அரசாங்கத்துடன் ஒரு தேசிய நல்லிணக்க கலந்துரையாடலை மேற்கொள்வதானது பொருத்தமற்றது என்றும், இந்த நிலைமையை இலங்கை அரசாங்கம் சர்வதேச மட்டத்தில் தமக்கு சாதகமாக பயன்படுத்திக் கொள்ளும் என்பதும் பொதுவான கருத்தாக உள்ளது.

தமிழ் மக்களின் போராட்டம் சிங்களவர்களுக்கு எதிரானது அல்லவென்பதை ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட அனைத்து இயக்கங்களும் கூறிவந்துள்ளன. ஆனால், சாதாரண சிங்கள மக்களிடம் சென்று இதனை ஒரு பரப்புரையாக (Lobbying) யாரும் மேற்கொள்ளவில்லை. இதனை தமிழ் அரசியல்வாதிகள் எப்போதோ மேற்கொண்டிருக்க வேண்டும்.



உலகத் தமிழர் பேரவை வெளியிட்டுள்ள நீண்ட அறிக்கையில் தங்கள் தரப்பு விளக்கங்களை அளித்துள்ள போதும், தாயகத்தில் ஆங்காங்கே எதிர்ப்பு நடவடிக்கைகள் நடைபெற்றுக் கொண்டுதானிருக்கின்றன. நடுநிலை நின்று சிந்திக்கும் சிலர் உலகத்தமிழர் பேரவையினரின் இந்த நடவடிக்கை காலங்கடந்த ஒன்று எனத் தெரிவிக்கின்றனர்.

இறுதிக்கட்டப் போரில் இலங்கைப் படைகள் மேற்கொண்ட மனித உரிமை மீறல்களுக்கு எவ்வித பொறுப்பையும் கூறாது அரசாங்கம் அதனைத் தட்டிக் கழித்து வருகின்றது. காணாமல் ஆக்கப் பட்டவர்களின் உறவினர்களின் போராட்டம் வருடக்கணக்கில் நடந்துகொண்டிருக்கும் நிலையிலும் அதற்கு அரசாங்கத்திடமிருந்து எந்தவொரு பதிலும் இல்லை. தமிழர்களின் காணிகளிலிருந்து இன்னும் படையினர் முற்றாக வெளியேறவில்லை.

சமாதான பேச்சுவார்தைக் காலங்களில் விடுதலைப்புலிகள் இவ்வாறானதொரு உரையாடலை சிங்கள கலைஞர்கள், புத்திஜீவிகளுடன் மேற்கொண்டிருந்தனர். புலிகளின் குரல் வானொலியில் சிங்கள மொழியிலான சேவையினையும் அவர்கள் நடத்தினர். அதைவிடவும், 'தேதுனு' (දේදුනු - வானவில்) என்ற சிங்களப் பத்திரிகை ஒன்றையும் விடுதலைப்புலிகள் வெளியிட்டனர். அதனை அதிகளவான சிங்கவர்கள் வாசித்தனர். அதனை தொடர்ச்சியாக பெறுவதற்காக சந்தா செலுத்தியவர்களையும் காணக்கூடியதாக இருந்தது. பின்னர் இந்த முயற்சிகள் யாவும் வீணாகிவிட்டன.

எனவே, உலகத் தமிழர் பேரவையின் தற்போதைய முயற்சி தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண எவ்வகையில் உதவப் போகின்றது என்கின்ற கேள்வியை யாரும் மறுதலிக்க முடியாது.

விளம்பரம்
VLAMBARAM
34ஆவது ஆண்டில்
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலக பொறுப்பாளர்: சுதர்சினி D.
'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.
Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
www.tamilvanakkam.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved


சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# ஐக்கிய...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

குறிப்பிடப்பட்டுள்ளது. இது COP28 மாநாட்டின் சாதனையாகப் பார்க்கப்பட்டா லும் இதை எவ்வாறு நடைமுறைப்படுத்து வது எனத் தெளிவான படிமுறைகள் இந்த ஒப்பந்தத்தில் வெளியிடப்படாதபடியால் பல நிறுவனங்கள் இந்த ஒப்பந்தத்தை விமர்சித்துள்ளன.



இந்த COP28 மாநாட்டில் பங்குபற்ற 70,000 பேர் உத்தியோகபூர்வமாக அழைக் கப்பட்டிருந்தனர் மற்றும் 400,000பேர் எக்ஸ்போ நகரில் சுற்றி அமைக்கப்பட் டுள்ள "பசுமைப் பிரதேசத்தை" பார்வை யிட அனுமதி பெற்றிருந்தனர். பல சுற்றுச் சூழல் ஆய்வாளர்கள் 70,000பேர் இம்மா நாட்டிற்கு அழைக்கப்பட்டிருந்ததை யும், 100க்கும் மேற்பட்ட தலைவர்கள் தங்கள் குழுவினருடன் பிரத்தியேக விமானத்தில் இம்மாநாட்டிற்கு வந்ததையும் சுட்டிக்காட்டி உலகில் நடைபெற்ற எந்தக் காலநிலை மாற்ற மாநாட்டிலும் பார்க்க இந்த COP28 மாநாட்டிலேயே மிகவும் அதிக கார்பன் தடம் (Carbon Footprint) பதிக்கப்பட்டுள்ளதாக விமர்சித்துள்ளனர்.

COP28 மாநாட்டின் ஆரம்பத்தில் இங்கிலாந்தின் மன்னர் சார்ள்ஸ் III, சுற்றுச்சூழலில் அதிகரித்து வரும் மாசுகள் குறித்து எச்சரிக்கை விடுத்தார். உலகம் அதன் காலநிலை இலக்குகளை அடைவதற்கு பயப்படும்படியான அதி தொலைவில் நிற்கிறது என்று கூறினார். அத்துடன் மாநாட்டின் ஆரம்பநாளில் காலநிலை மாற்றத்தின் விளைவால் பாதிக்கப்படும் பொருளாதார வசதியற்ற அரசுகளுக்கு உதவும்முகமாக "இழப்பு மற்றும் சேதம்" (Loss and Damage) நிதி உருவாக்குவதற்கும் ஒப்புக்கொள்ளப் பட்டது. இந்த நிதி வழங்குப்படுவதை நிர்வகிக்கும் பொறுப்பு உலக வங்கிக்கு கொடுக்கப்பட்டது. இந்த நிதி ஆரம்பிக் கப்பட்டபோது UAE $100 மில்லியனையும், ஜெர்மனி $100 மில்லியனையும், இங்கிலாந்து $75 மில்லியனையும், அமெரிக்கா $25 மில்லியனையும் மற்றும் ஜப்பான் $10 மில்லியனையும் வழங்குவதாக உறுதியளித்தன.

சர்வதேச நாணய நிதியத்தின் (IMF) தலைவரான Kristalina Georgieva "இழப்பு மற்றும் சேதம்" நிதி உருவாக் கப்பட்டதற்கு தனது திருப்தியை வெளியிட்டார். அவர் உரையாற்றுகையில், "கார்பன் விலை" விதிக்கப்பட வேண்டும். அத்துடன் கார்பன் பாவனைகளைக் குறைக்க அரசுகள் மேலதிக முயற்சிகள் செய்யவேண்டும் எனவும் கூறினார்.

அவர் மேலும் கூறுகையில், அரசுகள் புதைபடிவ எரிபொருள் நிறுவனங்களுக்கு அளிக்கப்படும் மானியங்கள் நிற்பாட்டப்பட வேண்டும். பணவீக்கம் போன்ற காரணங்களால் புதைபடிவ எரிபொருள் நிறுவனங்களுக்கு வழங்கப்படும் மானியங் களின் அளவு 2022ஆம் ஆண்டில் அதி கூடிய அளவான $7.1 ரில்லியனை எட்டியிருந்தது என்றார்.

COP28 மாநாட்டின் இறுதி அறிக்கையில் கையொப்பம் இட்ட நாடுகள் அதில் 10 உறுதிமொழிகளை எடுத்திருந்தன. அத்துடன் பல்வேறு விதமான காலநிலை மாற்ற முயற்சிகளுக்கு மொத்தமாக $85 பில்லியனை வழங்குவதற்கு உறுதியளித்திருந்தன.

அமெரிக்கா, இங்கிலாந்து, ஜேர்மனி மற்றும் இந்தியா உட்பட 13 நாடுகள் காலநிலை மாற்ற முயற்சிகளுக்கு 2025ஆம் ஆண்டிற்கு முன்னர் $100 பில்லியனையும், 2030ஆம் ஆண்டிற்கு முன்னர் $6 ரில்லியனையும் முதலிட உறுதிபூண்டுள்ளன.

அமெரிக்கா, ஜேர்மனி, பிரான்ஸ் மற்றும் பிரேசில் உட்பட 71 நாடுகள் சுற்றுப் புறச்சூழல் வெப்பநிலை 1.5 பாகை c இற்கு மேல் அதிகரிக்காமல் இருக்கவும் பல்லுயிர்களின் (Biodiversity) பாது காப்பை உறுதிப்படுத்தவும் தேசிய மற்றும் உலகளாவிய முயற்சிகளை எடுக்க உறுதிபூண்டுள்ளன.

அமெரிக்கா, சீனா, கனடா, ருவாண்டா மற்றும் உக்ரைன் உட்ப 82 நாடுகள் அமைதியை உருவாக்கும் சுற்றுப்புறச் சூழல் கொள்கைகளை வகுக்கவும், அதிகரித்து வரும் மோதல்களால் (Conflict) ஏற்படும் சுற்றுப்புறச்சூழல் சீரழிவுகளை தடுக்கவும் உறுதி பூண்டுள்ளன.

ஐரோப்பிய ஒன்றியம், பிரேசில், பூட்டான், அங்கோலா மற்றும் பங்களாதேஷ் உட்பட 130 நாடுகள் 2030ஆம் ஆண்டுவரை ஒவ்வொரு ஆண்டும் சக்தியின் ஆற்றல் திறனை (Energy efficiency) இரண்டு மடங்கால் (2%இல் இருந்து 4%வரை) அதிகரிக்கவும், 2030ஆம் ஆண்டில் பின்னர் மூன்று மடங்காய் சக்தியின் ஆற்றல் திறனை அதிகரிக்கவும் உறுதி பூண்டுள்ளன.

களாவிய உணவு விநியோக முறையை மேலும் நிலையானதாக ஆக்கவும் (Sustainable) கால நிலையைத் தாங்கக் கூடியதாக ஆக்கவும், பாதிக்கப்படக்கூடிய மக்களுக்கு உதவுவதன் மூலம் உணவுப் பாதுகாப்பை ஏற்படுத்தவும், நிலையான குடிநீர் விநியோக முறையை ஏற்படுத்தவும் உறுதி பூண்டுள்ளன.



Global Faith leaders in Abu Dhabi for the COP28 summit

அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் சீனா உட்பட 143 நாடுகள் பூர்வகுடி மக்கள், பெண்கள், உள்ளூர் சமூகங்கள் மற்றும் சுகாதாரப் பணியாட்களுடன் சேர்ந்து காலநிலை மாற்றத்தால் ஏற்படும் எதிர்மறையான உடல்நலப் பாதிப்புகளைக் குறைப்பதற்கான முயற்சிகளை எடுக்க உறுதிபூண்டுள்ளன.

அமெரிக்கா, அவுஸ்ரேலியா, பிரேசில் மற்றும் சீனா உட்பட 159 நாடுகள் உல

பொது சுகாதாரத்தில் (Public Health) காலநிலை மாற்றத்தால் ஏற்படும் தாக்கத்தைப் பற்றி கலந்துரையாடிய முதலாவது COP மாநாடு COP28 ஆகும். COP28 மாநாட்டிற்கு முன்னர் இஸ்லாமிய, கிறிஸ்துவ மற்றும் இந்துமத குருமார் 28பேர் Abu Dhabiஇல் இரண்டு நாள் மாநாடு நடத்தி அதில் மதகுருமார்கள் காலநிலை மாற்றத்திற்கு எதிராக எவ்வாறு உதவலாம் என ஆராய்ந்தனர்.

# பயணம் தந்த நூல்

காலனித்துவத்தால் விடுபட்ட நாடுகளில்

முள்ளந்தண்டாகவும் அதில்
தொடுத்துள்ள விலா எலும்புகளாகவும்
விரிவாக்கம் பெறுகின்றன
நெடுஞ்சாலைத் திட்டங்கள்

பஞ்சம் தீர்க்கும் நன்செய் ஊர்
நிலங்களில் சோற்றின் விலை
குறைவாகக் காணப்படுகின்றது

பட்டாம் பூச்சிகள்போல் மகிழ்ந்து பறந்து
துள்ளியோடி விரைந்து செல்கின்ற
பள்ளி கல்லூரி
மாணவச் செல்வங்களின் சீருடையில்
பண்பாட்டுக் கூறுகள் காணப்படுகின்றன

கிராமிய மண்ணில் முளைத்து வளர்ந்து
நகர் புகுந்து விரைவாகப் பொருள்தேடும்
எண்ணங்கொண்டு
உழைப்போர் தொகை பெருகுகின்றது

தினமும் வாசித்து நிறைய யோசித்து
விண்ணுக்கும் அப்பால் வெகுதூரத்துக்கு
அறிவு ஞானத்தை எடுத்துச் செல்வதன்
அவசியம் புரிகின்றது.

முரணற்ற சிந்தனைக்கு உவகையான
'தனிமை வாய்ப்பை'
விடுதியின் அறையில் தங்கியிருந்து
தற்காலிகமாக அனுபவித்தேன்

சங்கப்புலவர்கள் நடந்த மண்ணில்
காலாற உலாவிய சிந்தனைத் துளிகள்

ஆன்மீகம் ஓங்கும் ஐந்திணை நிலத்தில்
தினந்தோறும்
ஐம்பது ரூபாய் உழைப்போரின்
கண்களிலும் நாங்கள் 'அகதியில்லை'
என்று கூறும் அஞ்சாநெஞ்சம் கண்டேன்

குவிந்த சொத்துக்களும் அறிவு
ஏடுகளும் சுட்ட மண்ணும் ஈர மண்ணும்
ஒட்டாத நிலையில்

இழுவை வண்டில் கூலிகள் சிரித்துப்பேசி
உண்டகளை தொண்டருக்கும் பழ
மொழியில் மதிய நேரம் வேப்பமரக்
கிளைகளின் கீழ்.

பயணம் செய்த பேரூந்தில் ஒலிக்கின்றது
பொதுவுடைமைக் கவிஞர்களின்
தத்துவப் பாடல்கள் பஞ்சாமிர்தமாக;

துண்டு துண்டாக உடைந்த வானம்
சிதறி விழுந்த துண்டுகளை
அவதானமாகப் பொறுக்கி எடுத்து
ஒன்றுசேர்த்து ஓடமாகப் பொருத்தி
ஏரியில் மிதக்கவிட்டு இன்பத்தமிழில்
இன்னிசை பாடிக்கொண்டு
பயணிக்கின்றன
பஞ்சவர்ணப் பேரழகுக் கிளிகள்;!



முத்துராஜா

# போதைப்பொருளுக்கு எதிரான போர் வெற்றி பெறுமா?

**விகிர்தன்**

இலங்கையில் போதைப்பொருளை கட்டுப்படுத்துவதற்காக நாடளாவிய ரீதியில் தேடுதல், சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன 'யுக்திய' எனப் பெயரிடப்பட்ட இந்த நடவடிக்கை கடந்த 17ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

கடந்த 29ஆம் திகதி வரை நடத்தப்பட்ட சுற்றிவளைப்பில் 17,837 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், பெருமளவான போதைப்பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதேவேளை, போதைப்பொருள் வியாபாரிகளின் சொத்துகளும் முடக்கப்பட்டுள்ளன. போதைக்கு அடிமையானோர் கைது செய்யப்பட்டு புனர்வாழ்வு முகாம்களுக்கு அனுப்பிவைக்கப்படுகின்றனர்.

பொலிஸ் போதைப்பொருள் ஒழிப்புப் பிரிவு மற்றும் விசேட பணியகம் பட்டியலிட்டுள்ள சந்தேக நபர்களின் பட்டியலில் உள்ள 4,665 பேரில் 1,375 பேர் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

நாட்டில் நாளுக்குநாள் அதிகரித்து வரும் போதைப்பொருள் கடத்தல், போதைப் பொருள் வியாபாரம், போதைப்பொருள் பாவனை என்பனவற்றை அடியோடு இல்லாதொழிப்பதென்பது மிகவும் சவாலானதே.

இது ஆரம்ப நிலையிலேயே தடுக்கப்பட்டிருக்க வேண்டும். இன்று மிகவும் தீவிரமடைந்த நிலைக்கு வந்து விட்டது. நாடு இன்று எதிர்நோக்கும் பாரிய பிரச்சினைகளில் போதைப்பொருள் மிகவும் ஆபத்தான ஒன்றாக மாறியுள்ளது. நாடு முழுவதுமே இளைஞர் போதைக்கு அடிமையாகியுள்ளனர்.

பதில் பொலிஸ்மா அதிபராகப் பொறுப்பேற்றுள்ள தேசபந்து தென்னக்கோன் போதைப்பொருளை கட்டுப்படுத்தும் இந்த 'யுக்திய' சுற்றிவளைப்பு நடவடிக்கையை நெறிப்படுத்தி வருகின்றார். இவர் மேல் மாகாணத்தின் பிரதி பொலிஸ்மா



அதிபராக இருந்தபோது மேல் மாகாணத்தில் இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கின்றார். ஆனால், மேல்மாகாணத்தில் அப்போது அது முழுமையாக கட்டுப்பாட்டிற்குள் வந்ததா என்றால் இல்லை என்றுதான் கூற வேண்டும். இப்போது நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்படும் இந்த நடவடிக்கை ஒரு போர் போன்றது என பொலிஸ் தரப்பில் கூறப்படுகின்றது.

போதைப்பொருள் வர்த்தகத்தைக் கட்டுப்படுத்தி, திட்டமிட்ட குற்றங்களில் ஈடுபடும் வலையமைப்பை வீழ்த்துவதே, பொலிஸ் திணைக்களத்தினால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள இந்த தேடுதல் நடவடிக்கைகளின் நோக்கம் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ தெரிவிக்கின்றார்.

இந்த போதைப்பொருள் வலையமைப்பில் இதற்கு முன்னர் அடையாளம் காணப்பட்ட நபர்கள் இருக்கின்றனர். அவர்கள் இன்றும் அந்த நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்களை இலக்காகக் கொண்டு இந்தச் சோதனைகளை முன்னெடுத்து வருகின்றோம். இந்த வலையமைப்பை வீழ்த்தி போதைப் பொருளுக்கு அடிமையாகியுள்ளவர்களுக்கு புனர்வாழ்வு வழங்குவது இந்த திட்டத்தின் நோக்கம் என்றும் அவர் கூறுகின்றார்.

நாடு தற்போது யுத்தத்திற்கு சமமான ஒரு நிலைமையையே எதிர்நோக்கியுள்ளது. இதைப்பற்றி வெறுமனே பேசிக் கொண்டு இருப்பதால் பயனில்லை. வேலைத் திட்டத்தை நாடு முழுவதும் செயற்படுத்தியுள்ளோம். இதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு மிகவும் அவசியம் என்கிறார் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ்.

அத்துடன் போதைப்பொருள் கடத்தல்காரர்களுடன் மதத் தலைவர்களுக்கும் தொடர்பிருப்பதாக அவர் குறிப்பிடுகின்றார். ஆனால், அரசியல்வாதிகளுக்கும், பாதுகாப்புத் தரப்பினரும் அவர்களுடன் தொடர்புகள் உள்ளன என்பது மறுக்க முடியாத உண்மை.

கைது செய்யப்படும் போதைப்பொருள் கடத்தல்காரர்கள், வியாபாரிகளிடம் அவர்களுக்கு உதவியாக இருக்கும் அரச தரப்பினர் யார் என்பதை விசாரணை செய்து கண்டறிய வேண்டும். போதைப் பொருள் வியாபாரிகளுக்கு வழங்கப்படும் தண்டனையை விட அதிகமான தண்டனை அவர்களுக்கு வழங்கப்பட வேண்டும். அவர்களது சொத்துக்கள் பறிமுதல் செய்யப்பட வேண்டும்.

பலமான பின்னணிகளை கண்டறியாது போதைப்பொருள் வியாபாரிகளை மட்டும் கைது செய்வதால் போதைப்பொருள் தொடர்பான குற்றச்செயல்களை முழுமையாக தடுத்து நிறுத்த முடியாது.

தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை அடுத்து, நாடு முழுவதிலும் உள்ள போதைப் பொருள் வியாபாரிகள் உசாரடைந்து விட்டதாகவும், போதைப்பொருள்கள் பதுக்கிவைக்கும் நடவடிக்கைகளை அவர்கள் மேற்கொள்வதோடு தங்களுக்கான பாதுகாப்பு ஒழுங்குகளையும் அவர்கள் மேற்கொள்வதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை, தமிழர் வாழும் வடக்கு, கிழக்கு பிரதேசங்களில் மேற்கொள்ளப்படும் சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் போதாது என தமிழ் மக்கள் தெரிவிக்கின்றனர். தென்னிலங்கையில் மேற்கொள்ளப்படுவதைப் போன்று அதிரடி நடவடிக்கைகள் தமிழ் பிரதேசங்களிலும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

தமிழ் இளைஞர்களை மழுங்கடிக்க திட்டமிட்டே போதைப்பொருள் வடக்கு, கிழக்கிற்கு அனுப்பப்படுவதான சந்தேகம் தமிழ் மக்களுக்கு உள்ளது. அதனால் தமிழ் பிரதேசங்களில் தீவிர சுற்றிவளைப்புகளை சாதாரண பொது மக்களுக்கு பாதிப்பின்றி மேற்கொள்ள வேண்டும் என தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்றனர்.

# கனடா வரலாற்றில் தமிழர் படகுகள்




2023 மார்கழி 16 சனிக்கிழமை அன்று ஸ்காபரோ சிவிக் சென்ரர் மண்டபத்தில் பண்டிதர் ச.வே. பஞ்சாட்சரம் அவர்களால் தொகுத்து வழங்கப்பட்ட 'கனடா வரலாற்றில் தமிழர் படகுகள்' என்ற நூல் சிறப்பாக வெளியிட்டு வைக்கப்பெற்றது. இந்த நூலில் புகைப்படங்களுடன் தமிழ் மொழியிலும், ஆங்கிலத்திலும் தகவல்கள் இடம் பெற்றிருக்கின்றன.

மங்கல விளக்கேற்றல், கனடியதேசியப் பண், தமிழ்த்தாய் வாழ்த்து ஆகியவற்றைத் தொடர்ந்து ச. சாந்தினியின் வரவேற்புரை இடம்பெற்றது. அடுத்து தேவா சபாபதியின் வரவேற்புரையும், தொடர்ந்து கனடா தமிழ் எழுத்தாளர் இணையத் தலைவர் அகணி சுரேஸின் தலைமையுரையும் இடம் பெற்றன. அவர் தனது உரையில் இந்த நூலை வெளிக் கொண்டு வந்தோரையும், நிதி உதவி செய்தோரையும் பாராட்டி, கனடியத் தமிழர் பற்றி அடுத்த தலைமுறையினர் கட்டாயம் அறிந்து கொள்ள வேண்டிய முக்கியமான ஆவணம் இது என்பதையும் குறிப்பிட்டார். வெளியீட்டுரை நிகழ்த்திய செல்வி ருக்ஸா சிவானந்தம் மற்றும் ஆய்வுரை நிகழ்த்திய திரு. பொன்னையா விவேகானந்தன் ஆகியோர் நூலின் உள்ளடக்கத்தில் உள்ள கட்டுரைகள் பற்றிக் குறிப்பிட்டு உரையாற்றினர்.




செல்வி ருக்ஸா சிவானந்தம் விழாவில் பங்குபற்றிய புதிய தலைமுறையினருக்காக ஆங்கிலத்திலும் சில தகவல்களைப் பகிர்ந்து கொண்டார். பொன்னையா விவேகானந்தன் ஒரு குறும் படக் கதைபோலப் படகில் நடந்த சில சம்பவங்களைத் தமிழில் எடுத்துச் சொன்னார்.

அடுத்து பிரதம விருந்தனராகக் கலந்து கொண்ட அமைச்சர் ஹரி ஆனந்தசங்கரி அவர்களின் உரை இடம்பெற்றது. 1986 ஆம் ஆண்டு ஓகஸ்ற் மாதம் படகுகளில் தத்தளித்த 155 இலங்கைத் தமிழரைக் காப்பற்றிய நியூ பவுண்லாந்து படகுத் தலைவர் 'கஸ்டோல்ரன்' அவர்களையும், மற்றும் மீனவ நண்பர்களையும், அவர்களைப் பல எதிர்ப்புகளுக்கு மத்தியில் அகதிகளாக உள்வாங்கிய அப்போதைய பிரதமரான மல்ரோணியையும், குடிவரவு அமைச்சர் கெரிவெய்னரையும் பாராட்டினார். ஈழத் தமிழர் கனடாவுக்கு வருவதற்குத் திறக்கப்பட்ட முதல் வாசல்

(தொடர்ச்சி 08ஆம் பக்கம்...)


BUILD YOUR
ESTATE STYLE
CUSTOM HOUSE
READY TO BUILD
LAND
FOR SALE
IN THE DURHAM & GTA
Full Home Designs — Fully Insured, Customer Focused, Outstanding Design Team Here To Support Your Dream Home.
Only
$699K


HOUSE
FOR RENT
Warden &
401/Sheppard
Bright living & dining room with walkout to south facing patio & fenced yard. Nice hardwood floors, eat-in kitchen with stainless steel appliances. Spacious bedrooms, Partially finished basement with new broadloom, fresh paint, cozy wood burning fireplace & extra bath with separate shower. Plenty of space to make room for the extended family.
PROPERTY FEATURES
• Living Room • 2 Bathroom
• Dining Room • Smoke and pet free home
• 3 Bedroom • Bungalow House
APARTMENT
FOR RENT
Enjoy Brand New Never Lived In Immaculate 2 Bedroom, 2 Bathroom Suite In Luxury Condo In Prime Scarborough Location. Excellent Location, Minutes To TTC, Highway 401, Go Train
FACILITIES
MORE INFORMATION
647- 296- 0596
www.ParaCity.ca
KENNEDY
& 401


HOME FOR SALE
PRIDE OF OWNERSHIP!
Custom Home over 5000 sq ft
RICHMOND HILL
TORONTO
TORONTO
OSHAWA
OFFICE USE
You're in the right place for real estate!
Book Now
647-296-0596
www.ParaCity.ca


FOR SALE
New Brunswick
CUSTOM HOME
ONLY
1.4M
6500 SQ.FT
HOUSE
For Your Beloved Family


Get in Touch
Para Tisikulasingam
Real Estate Agent
HomeLife/GTA Realty Inc.
Brokerage*
HOMELIFE
HIGHER STANDARDS
Raja Mahendran
Broker/Owner
HomeLife/GTA Realty Inc.
Brokerage*
(647) 296-0596
HOMELIFE/GTA REALTY INC,. BROKERAGE*
independently owned & operated
5215 Finch Ave E #203, Scarborough, ON M1S 0C2
O : 416.21.6969 | F: 416.321.6963
(416) 321-6969

# நாமும் நமது இல்லமும் 645



ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969




சிறப்பாக வாழ எனது இனிய வாழ்த்துகள்.

- ராஜா மகேந்திரன்

ஆதன வியாபாரம் மற்றும் சொத்து வியாபாரம் பல பரிணாமமணங்களை எடுத்து வருவதனை ஆதனம் சம்பந்தப்பட்ட தொழிலில் ஈடுபடுவதால் 1990களிலிருந்து இன்று வரை ரொறொன்ரோ மற்றும் அதனைச் சுற்றிய பகுதிகளில் குறிப்பாக ஒன்ராறியோ மாகாணத்தில் இலகுவாக அவதானிக்கக் கூடியதாக உள்ளது.




1980ஆம் ஆண்டின் இறுதிப்பகுதியில் ஆதன வியாபாரம் மிக உச்சத்தில் காணப்பட்டது. சராசரிவிலை 1989ஆம் ஆண்டில் $273,698ஆக இருந்தது. 1989ஆம் ஆண்டில் கைமாறிய சொத்துகள் (ஆதனங்கள்) 38,960 ஆகும்.

இந்தக் காலப்பகுதியில் கனடிய மத்திய வங்கியின் வட்டி வீதம் 12.29%ஆகக் காணப்பட்டது. இப்பொழுதுடன் ஒப்பிடும் போது (2023), இது பெரிய வட்டிவீதம் தான். இதற்கு முந்திய ஆண்டுகளில் இதனை விடவும் அதிகமாகக் காணப்பட்ட வரலாறுகளும் உண்டு.

1989ஆம் ஆண்டிலிருந்து ஆதன விலையும், வட்டி வீதமும் குறையத் தொடங்கியது. தொடர்ச்சியான விலை குறைவு, கனடியர் பலர் தமது ஆதனங்களை இழக்க வேண்டிய நிலையும் ஏற்பட்டது. தொடர்ச்சியாக ஏழு (7) வருடங்கள் (1989ஆம் ஆண்டிலிருந்து 1996ஆம் ஆண்டு வரை) விலை குறைந்தே வந்துகொண்டு இருந்தது.

ஏழு வருடங்களிற்கு பிற்பாடு 1997ஆம் ஆண்டு விலையும் அதிகரித்து ஆதன வியாபாரமும் அதிகரித்தது. இந்நிலைமை தொடர்ச்சியாக பல வருடங்கள் தொடர்ந்தது. ஆதன வியாபாரத்தில் 2008-2009ஆம் ஆண்டில் மாற்றம் ஏற்பட்ட போதும், அன்றைய மத்திய வங்கியின் ஆளுநர் திரு. மார்க் காணியின் சிறந்த முடிவுகளால் பாதிப்பு இடை நிறுத்தப் பட்டது. முக்கியமாக அவர் அன்று எடுத்த ஆயுதம் வட்டிவீத குறைப்பு. இதன் தொடர்ச்சியாக வங்கி வட்டி வீதம் 0.50%ஆகக் குறைக்கப்பட்டது. வியாபாரம் ஏறுமுகமாகக் காணப்பட்டது.

இந்நிலைமை தொடர்ந்தது. அதிக ஆதன வியாபாரத்தையும், விலை அதிகரிப்பையும் கட்டுப்படுத்த 2017ஆம் ஆண்டில் அடமானம் பெறுவதில் இறுக்கமான நிலைமைகள் உருவாக்கப்பட்டது.

இதனால் 2017-2018ஆம் ஆண்டில் ஆதன வியாபாரம் மந்தநிலையை நோக்கி சென்றது. எனினும், 2018ஆம் ஆண்டைத் தவிர மற்றைய ஆண்டுகளில் வியாபாரமும், விலையும் அதிகரித்தே சென்றது. கோவிட்-19இன் பாதிப்பு 2020இன் ஆரம்ப ஆண்டில் ஏற்பட்டது. வட்டி வீதம் மேலும் இறக்கப்பட்டது. இதனால், மார்ச் 04, 2020இல் 1.75% இலிருந்து 1.25%ஆகவும் பிற்பாடு மார்ச் 27, 2020இல் மேலும் 0.50% குறைத்து 0.75%ஆகவும், மார்ச் 23, 2020இல் மேலும் 0.25% குறைக்கப்பட்டு 0.25%ஆக மார்ச் 2020இல் மட்டும் வட்டிவீதம் 1.5% குறைக்கப்பட்டது. இதனால், கொரோனா தொற்றின் பாதிப்பிலிருந்து ஆதன வியாபாரம் தப்பித்தது.

அத்துடன் கனடிய மத்திய அரசு கனடியருக்குப் பலவிதமான சலுகைகளை (உதவிகளை) தொடர்ந்து செய்து வந்தது. அத்துடன் 0.25% என்ற மத்திய வங்கியின் வட்டிவீதம் ஏறக்குறைய இரண்டு வருடமாக மாறாமல் இருந்தது. சகலரும் ஆதனத்தில் முதலீடு செய்து அதிக இலாபம் எடுக்கத் தொடங்கினர். பணவீக்கமும் அதிகரிக்கத் தொடங்கியது.

கடந்த 40 வருடத்தில் பெரிய பெறுமதியான பணவீக்கம் 2022இல் ஏற்பட்டது. ஆதன வியாபாரத்தையும் பணவீக்கத்தையும் கட்டுப்படுத்த மார்ச் 02, 2022இல் இரு வருடங்களிற்குப் பின்னர் முதல் தடவையாக மத்திய வங்கி 0.25% அதிகரிக்கப்பட்டு வட்டிவீதத்தை 0.50%ஆக்கியது. ஏறக்குறைய கடந்த இரு வருடங்களில் மத்திய வங்கி வட்டிவீதம் 0.25%இலிருந்து 5%ஆக அதிகரிக்கப்பட்டது. இதனால் முதன்மை வட்டிவீதம் 7.2%ஆக அதிகரித்தது.

| YEAR | BANK RATE |
|---|---|
| 1987 | 8.40 |
| 1988 | 9.69 |
| 1989 | 12.29 |
| 1990 | 13.04 |
| 1991 | 9.03 |
| 1992 | 6.78 |
| 1993 | 5.09 |
| 1994 | 5.77 |
| 1995 | 7.31 |
| 1996 | 4.53 |
| 1997 | 3.52 |

இதனால், 2022-2023இல் ஆதன வியாபாரம் குறிப்பிட்டளவு குறைந்தது. ஆனால், சராசரி ஆதன விலையில் குறிப்பிடக்கூடியளவு விலை குறைவு ஏற்படவில்லை.

2022-2023இல் பெரிய தாக்கத்தை ஆதன வியாபாரம் ஏற்படுத்தியுள்ளது. எனினும், 1989-1996உடன் ஒப்பிடும்போது 2022-2023 வேறுவிதமான நிலைமையில் உள்ளது. கடந்த சில வருடங்களாக அதிகளவு புதியவர்கள் கனடாவிற்கு வந்துள்ளனர். இவர்கள் தங்குவதற்கு அதிக இடம் தேவைப்படுகின்றது. 2023இல் ஒரு மில்லியனிற்கு மேற்பட்ட புதியவர்கள் கனடாவிற்கு வந்துள்ளனர். கனடாவின் சனத்தொகை 40.5 மில்லியனை தாண்டியுள்ளது.

கனடிய சரித்திரத்திலேயே அதிகளவு புதியவர்கள், மாணவர்கள் உட்பட 2023இல் கனடாவிற்கு வந்துள்ளனர். இதனால் வாடகையின் பெறுமதியும் அதிகரித்துள்ளது.

2022-2023 போல் அல்லாமல் 2024இல் கனடிய வங்கி வட்டிவீதம் குறைக்கப்படும் என ஆய்வாளர்கள் எதிர்பார்க்கின்றனர். இவ்வாறு நிலைமை ஏற்பட்டால், 2024இல் ஆதன வியாபாரத்தில் புதிய மாற்றத்தை எதிர்பார்க்கலாம்!

கடந்த 30 வருட ஆதன வியாபாரத்தை அவதானிக்கும்போது, இவ்வியாபாரம் ஒரு குறிப்பிட்டவடிவில் மாறுவதனைக் காணலாம். கடந்த இரு வருடங்கள் ஏற்பட்ட தாக்கம் / மாற்றம், குறிப்பிட்ட காலத்தில் மாறி நிலைமை சிறப்புறும்.

ஆதன வியாபாரத்தில் மிகவும் கவனமாக தகுந்த நிபுணர்களுடன் கலந்து ஆலோசனை பெற்று முதலிட வேண்டும்.

தகுந்த முறையில் முதலிட்டால் கனடாவில் பணம் சேர்ப்பதற்கு ஆதன முதலீடும் ஒரு சிறந்த முறையாகும்.

# கனடா...


06ஆம் பக்கத்தொடர்ச்சி

கதவு இதுதான் என்பதையும் குறிப்பிட்டார். தொடக்கத்தில் கிண்டல் பண்ணினாலும் இன்று கனடாவில் எங்கள் சமூகம் மதிப்பு மிக்கதாக வளர்ந்திருப்பதை மேலும் சுட்டிக் காட்டினார்.



இரத்தினவேலுப்பிள்ளை கேதாரநாதன் இந்த நூலை வெளியிட்டு வைக்க, முதற் பிரதியை விளம்பரம் பத்திரிகை பதிப்பாளர் ராஜா மகேந்திரன் பெற்றுக் கொண்டார்.

அடுத்து நூலாசிரியர் பண்டிதர் ச.வே. பஞ்சாட்சரம் அவர்களின் ஏற்புரை இடம் பெற்றது. படகுகளில் அகதிகளாக வந்தவர்கள் அன்று சிலரின் கேலிக்கு உள்ளாகினாலும், இன்று குடியுரிமை பெற்று கனடா நாட்டின் வளர்ச்சிக்காகச் சிறப்பாகச் சேவையாற்றுவதைச் சுட்டிக் காட்டினார். யூத இனத்தவர், சீக்கிய இனத்தவர் வந்த இரண்டு கப்பல்கள் திருப்பி அனுப்பப்பட்ட நிலையில், இந்தக் கப்பலில் வந்தோர் மனிதாபமான அடிப்படையில் உள்வாங்கப்பட்டதையும் அவர் குறிப்பிட்டார். இந்த விழாவில் கனடா தமிழ் எழுத்தாளர் இணைய அங்கத்தவர்களால் நூல் தொகுப்பாசிரியர் பண்டிதர் ச.வே. பஞ்சாட்சரம் அவர்கள் கௌரவிக்கப்பட்டார்.




செல்வி ஆரணி சுகப்பிரமம், செல்வி அரபி சுகப்பிரமம் ஆகியோர் இணைந்து நன்றியுரை வழங்கினர். இந்த நூல் வெளிவரக் காரணமாக இருந்த, அந்தப் படகில் பயணித்த திரு. சுகப்பிரமம் அன்னலிங்கம் அவர்கள் ஊடகங்களுக்கும், நூலைத் தொகுத்து வெளியிட்ட பண்டிதர் ச.வே. பஞ்சாட்சரம், திரு. பொன்னுச்சாமி செல்வவடிவேல், திரு. சில்வெஸ்டர் இராஜரட்ணம், செஞ் சிலுவைச்சங்கம், கனடியத்தமிழர் பேரவை, மற்றும் கனடிய அரசுக்கும் நன்றியைத் தெரிவித்தார். நிகழ்ச்சிகளைத் திரு. கந்தையா அருட்சோதி தொகுத்து வழங்கினார்.

# KOKUVIL HINDU COLLEGE
## OLD STUDENTS' ASSOCIATION CANADA

இரா போசன விருந்துடன்,
மாபெரும் இன்னிசை நடன நிகழ்வு

APRIL 6 2024

# மகுடம்
# MAHUDAM 2024



Metropolitan Center- Banquet Hall In Scarborough.
3840 Finch Ave E, Toronto, ON M1T 3T4

**கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் கனடா**

# நானிலம் போற்றும் நட்பு - 36




உங்கள் அனைவருக்கும் இனிய ஆங்கிலப் புத்தாண்டு வாழ்த்துகள்!

“பேதை பெருங்கெழீ நட்பின் அறிவுடையார்
ஏதின்மை கோடி உறும்...(அதிகாரம் தீ நட்பு, குறள் 816) என்ற குறளிற்கு “அறிவில்லாதவனுடைய மிகப் பொருந்திய நட்பை விட அறிவுடையவரின் நட்பில்லாத தன்மை கோடி மடங்கு நன்மை தருவதாகும்.” என்று உரையாசிரியர் மு.வரதராசனார் அவர்கள் உரை தந்துள்ளார்.

“அறிவில்லாதவனின் மிக நெருங்கிய நட்பைவிட அறிவுடையவரின் பகை, கோடி மடங்கு நல்லது.” என்று உரையாசிரியர் அருள்திரு திருக்குறள் மாமுனிவர் முனைவர் கு.மோகனராசு அவர்கள் உரை தந்துள்ளார்.

“அறிவில்லார் நட்பைவிட, அறிவுள்ளவர் பகைமை நல்லது” என்று உரையாசிரியர் சாமி சிதம்பரனார் அவர்கள் உரை தந்துள்ளார்.

“அறிவில்லாதவனின் மிக நெருங்கிய நட்பைவிட அறிவுடையவரின் பகை, கோடி மடங்கு நல்லது.” என்று உரையாசிரியர் கலைஞர் அவர்கள் உரை தந்துள்ளார்.
அறிவுடையவர்களின் நட்பு மிகவும் நல்லது என்ற கருத்தை இந்தக் குறள் எடுத்துக் கூறுகிறது.

இப்பொழுது குறுந்தொகையில் வரும் இருபத்தெட்டாவது பாடலைக் கவனிப்போம்.

இது ஔவையார் பாடிய பாட்டு. மணம் புரிந்து கொள்வதற்காகப் பொருள் தேடப் போயிருக்கின்ற தலைவன் விரைவில் வரவில்லை. அதுகண்டு வருந்திய தோழிக்குத் தலைவி கூறியது இப்பாடல். இது பாலைத்திணை சார்ந்தது.

“முட்டுவேன் கொல்! தாக்குவேன் கொல்!
ஓரேன் யானும்ஓர் பெற்றி மேலிட்டு
ஆசு ஒல்லெனக் கூவுவேன் கொல்!
அலமரல் அசைவளி அலைப்ப என்
உயவுநோய் அறியாது துஞ்சும் ஊர்க்கே.”

பொருள் தேடப் பிரிந்த தலைவன் திரும்பி வரவில்லை. விரைவில் வருவேன் என்று அவன் வாக்குறுதியளித்துச் சென்றான். ஆனால் அவன் சொல்லியவாறு விரைவில் வரவில்லை. இதை நினைத்துத் தலைவியும் வருந்தினாள். தோழியும் வருந்திக் கவலை கொண்டாள். தோழியின் இரக்கத்தைக் கண்ட தலைவி அவளிடம் கூறுவதாக இந்தப் பாடல் உள்ளது.

இந்தப் பாட்டின் பொருளினைக் கவனிப்போம்.

மெதுவாக அசையும் தென்றற் காற்று. என்னை வருத்துவதனால் நான் தூங்காது நிற்கின்றேன். என்னைத் துன்புறுத்தும் காம நோயை அறியாமல், நன்றாக உறங்கும் இவ்வூராரை. முட்டித்தள்ளுவேனோ. அடிப்பேனோ. ஒரு காரணத்தை முன்னிட்டுக் கொண்டு, கூச்சல் போடுவேனோ! யானும் என்ன செய்வதென்று அறியேன். என் துன்பத்தை இவ்வூரில் உள்ள என் தாய் முதலிய உறவினர்களும் அறியாமல் உறங்குகின்றனர். இதற்கு நான் என்ன செய்வேன்.

இப்பொழுது குறுந்தொகையில் வரும் முப்பதாவது பாடலைக் கவனிப்போம்.

இது கச்சிப்பேட்டு நன்னாகையார் என்னும் புலவர் பாடிய பாட்டு. தலைவியின் கூற்று. தலைவன் மன்றத்திற்காகப் பொருள் தேடும் பொருட்டுப் பிரிந்திருந்தான். அப்பொழுது தலைவியிடம் தோன்றிய துக்கத்தைக் கண்டு அதற்குக் காரணம் கேட்டாள் தோழி. தோழிக்குத் தலைவி தனது துக்கத்திற்கான காரணம் கூறுவதாக அமைந்திருப்பது இந்தப் பாடல். இது பாலைத்திணை சார்ந்தது.

“கேட்டிசின் வாழி தோழி! அல்கல்
பொய்வல் ஆளன் மெய்உறல் மரீஇய
வாய்த்தகைப் பொய்க்கனா மருட்ட, ஏற்றுஎழுந்து
அமளி தைவந் தன்னே குவளை
வண்டுபடு மலரின் சாஅய்த்
தமியேன் மன்ற அளியேன் யானே”.

ஒருநாள் தலைவியினிடம் என்றுமில்லாத அளவு ஒரு மாறுதல் உண்டாயிற்று. அவள் அகத்திலே முளைத்தெழுந்த துக்கம் முகத்திலே தெரிந்தது. வழக்கம் போலச் சிரித்துப்பேசாமல் முகத்தை தொங்கப்போட்டுக் கொண்டிருந்தாள். நடைப்பிணமாக உலாவிக் கொண்டிருந்தாள். தலைவியிடம் ஏற்பட்ட இந்தத் திடீர் மாறுதலைக் கண்டாள் தோழி!

“தலைவியே! ஏன் ஒரு மாதிரியாக இருக்கின்றாய்! உன் உள்ளத்திலே ஏதோ கலக்கம் இருப்பது போல் தெரிகின்றதே! திடீர் என்று இந்த மாறுதல் உன்னிடம் தோன்றியதற்கு என்ன காரணம்?’ என்று கேட்டாள்.

இந்தப் பாட்டின் பொருளினைக் கவனிப்போம்.

“தோழியே வாழ்க, என் மாறுதலுக்குக் காரணத்தைக் கூறுகிறேன் கேட்பாயாக. பொய் புகல்வதிலே வல்லவனாகிய காதலன். எனது உடம்பை அணைப்பது பொருந்திய. வாய்தகை. பொய்க் கனவு ஒன்று எழுந்து. என் உள்ளத்தை மயக்க, உடனே தூக்கத்தை விட்டு எழுந்து. என் படுக்கையை. அவன் இருக்கின்றானா என்று தடவிப் பார்த்தேன். அவனைக் காணாமையால் வண்டுகள் பறந்து அசைக்கின்ற குவளை மலரைப்போல மெலிந்து, தனித்திருப்பவளே யானேன். யான். நான் நிச்சயமாக இரங்கத்தக்கவள்தான்.”




இரவிலே என்னைத் தலைவன் தழுவிக் கொண்டதாகக் கனவு கண்டேன். அதுதான் என் மாறுதலுக்குக் காரணம் என்றாள் தலைவி.

இப்பொழுது குறுந்தொகையில் வரும் முப்பத்தோராவது பாடலைக் கவனிப்போம்.

இந்தப் பாட்டு ஆதிமந்தியார் என்னும் புலவர் பாடிய பாட்டு. தனது காதலன் அல்லாத அயலார் தன்னை மணக்க விரும்பி வந்தனர். அதைக் கண்டாள் தலைவி. உடனே தனது தோழியினிடம் முன்பே ஒருவனிடம் காதல் கொண்டிருக்கும் செய்தியை உரைத்தாள். இது மருதத்திணை சார்ந்தது.

“மள்ளர் குழீஇய விழ வினானும்
மகளிர் தழீஇய துணங்கை யானும்
யாண்டும் காணேன் மாண்டக் கோனை
யானும்ஓர் ஆடுகள மகளே! என்கைக்
கோடுஈர் இலங்குவளை நெகிழ்த்த
பீடுகெழு குரிசிலும் ஓர் ஆடுகள மகனே.”
இந்தப் பாட்டின் பொருளினைக் கவனிப்போம்.

“தோழியே! யாரோ அயலார் தங்கள் பிள்ளைக்கு என்னை மனைவியாக்க முயன்று கொண்டிருப்பதாகக் கேள்விப்பட்டேன். அந்த முயற்சியைத் தடுக்க வேண்டியது எனது ஆருயிர்த் தோழியாகிய உன் கடமை. நான் கன்னிப் பெண்ணல்லள். ஏற்கனவே எனக்கு மணமாகிவிட்டது. நான் செய்து கொண்டிருக்கும் மணம் காதற்களவு மணம். ஆதலால் ஒருவனுக்கு வாழ்க்கைப்பட்ட என்னை என் பெற்றோர் மற்றொருவனுக்குக் கொடுக்க முடிவு செய்வது முறையாகாது.

என் காதலன் எனது தகுதிக்கேற்ற பெருமையும், புகழும் உள்ளவன். அவன் என்னுடன் நட்புச் செய்து இப்பொழுது பிரிந்து நிற்கின்றான். நானும் அவனைப் பல இடங்களிலும் தேடிப் பார்த்துக் கொண்டுதான் இருக்கின்றேன். திருவிழாக் காலங்களிலே போர் வீரர்கள் தங்கள் சேரிகளிலே விளையாட்டுப் போர் நடத்துகின்ற இடங்களிலும் அவனைக் காணவில்லை. பெண்கள் ஒன்று சேர்ந்து விளையாடும் துணங்கைக் கூத்தாடும் இடங்களிலும் அவனைக் காணவில்லை. அந்தச் சிறந்த வீரனை வேறு எந்த இடத்தில் தேடியும் கண்டுபிடிக்க முடியவில்லை.

நானும் பெண்கள் விளையாடும் களத்திலே அவர்களுடன் சேர்ந்து விளையாடும் ஒருத்திதான். அவனும் நான் விளையாடும் களத்திற்கு அடிக்கடி வந்து என்னுடன் சேர்ந்து விளையாடும் ஒருவன்தான். நாங்கள் விளையாடும் போது அவன் என் கையைப் பிடிப்பான். அதனால் என் கையில் உள்ள சங்கு வளையல்கள் கழன்று விழும் இவ்வாறு எனக்குக் காதல் நோயைத் தந்தவன் அவன். ஆயினும் அவன் பெருமை யுள்ளவன், சிறந்த வீரன், எனது குணங்களுக்கேற்ற தலைவன்.”

நட்பின் பெருமை பற்றிக் குறுந்தொகை யில் வரும் பாடல் சிலவற்றையும் கடந்த இதழ்களில் உரையாடினோம்.

தலைவன், தலைவி ஆகியோரின் காதல் வாழ்க்கையில் தோழியின் பங்கு எவ்வளவு உயர்ந்ததாக உள்ளது என்பதை குறுந்தொகையில் உள்ள சில பாடல்கள் எடுத்துக் காட்டுகின்றன. நட்பின் பெருமை இவற்றால் நன்கு புலப்படுகிறது.

சங்க இலக்கியங்கள் மூலமாகவும் நட்பு பற்றிய கருத்துக்களை இத்தொடர் கட்டுரையில் தொடர்ந்து ஆராய்வோம்.
நாமும் வாழ்வோம். நம்மைச் சூழவுள்ளவர்களும் நன்றாகவே வாழட்டும். “நானிலம் போற்றும் நட்பு” என்ற தலைப்பில் தொடர்ந்து உரையாடுவோம். (தொடரும்)

# சென்னை ஏன் மீண்டும் மீண்டும் வெள்ளத்தில் மிதக்கிறது? யார் காரணம்? எங்கே பிரச்சினை?

## நேர்காணல்: தமிழ்நாடு பொதுப்பணித் துறை பொறியாளர் வீரப்பன் நேர்கண்டவர்: கண்ணன்

தமிழ்நாடு மீண்டும் ஒரு பெரிய வெள்ளப் பாதிப்பை சந்தித்திருக்கிறது. சென்னை, திருநெல்வேலி, தூத்துக்குடி நகரங்களில் பல வீடுகளில் மழை நீர் புகுந்துள்ளது. சில இடங்களில் முழு வீடுமே மழையில் மூழ்கியுள்ளது. பலி எண்ணிக்கை 100ஐ தாண்டலாம் என்கின்றனர். தமிழ்நாட்டின் தலைநகரத்தாலும் முக்கிய நகரங்களாலும் ஏன் பெரிய மழையை எதிர்கொள்ள முடியவில்லை? இது தொடர்பாக, தமிழ்நாடு பொதுப்பணித் துறையின் முன்னாள் சிறப்பு தலைமை பொறியாளர் அ. வீரப்பன் அளித்த பேட்டி இது.

**தமிழ்நாட்டின் தலைநகரான சென்னையில் 2015 வெள்ளப் பாதிப்புகளுக்குப் பின்னர் மழை நீர் வடிகால் பணிகள் நிறைய நடந்தது. கிட்டத்தட்ட 4000 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டது. ஆனால், இப்போது மீண்டும் அதே நிலைதான் நீடிக்கிறது. எங்கே தவறு நடந்தது? பெரு மழையை சென்னையால் ஏன் எதிர்கொள்ள முடியவில்லை?**

2015இல் பெய்த மழையில் - சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், கடலூர் - நான்கு மாவட்டங்களில் பெரும் வெள்ளச் சேதங்கள், உயிர்ச்சேதங்கள் மற்றும் சொத்துச் சேதங்கள் ஏற்பட்டன. அதே ஆண்டு டிசம்பர் மாத மூன்றாம் வாரத்தில் தூத்துக்குடியிலும் பெரும் மழைச் சேதங்கள். இந்த நிகழ்வுகளின் மூலம் அன்றைய அரசாங்கத்தின், அரசியல்வாதிகளின், ஏன் தனிப்பட்டவர்களின் தவறுகள் மற்றும் குற்றங்கள் பல வெளியே அப்போது வெளிச்சத்துக்கு வந்தன. எட்டு ஆண்டுகளுக்குப் பிறகு தற்போதைய பெருவெள்ளம் மீண்டும் 2015ஐ நினைவுபடுத்துகிறது. அன்றைய பேரழிவுகளில் இருந்து தமிழக அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் போதுமான பாடம் பெறவில்லை என்பதையே இது காட்டுகிறது.

**வடிநீர் கால்வாய்கள் அமைக்கப்பட்ட பிறகும் இப்போது ஏன் சாலைகளில் தண்ணீர் இவ்வளவு தேங்க வேண்டும்? வீடுகளுக்குள் ஏன் தண்ணீர் புக வேண்டும்?**

இந்த வடிநீர் கால்வாய்கள் எல்லாம் அனுபவம் மிக்க பொறியாளர்களின் ஆலோசனையைப் பெறாமலும் நீர் போக்கினைப் பற்றிய அறிவு இல்லாமலும் எந்தவிதமான திட்டமிடலும் இல்லாமலும் கட்டப்பட்டுள்ளன. இதை நாங்கள் பல ஆண்டுகளாக சொல்லி வருகிறோம். யாரும் கேட்பது இல்லை. மழை நீர் வடிகால் கால்வாய்கள் எதற்காக உருவாக்கப்பட்டனவோ அந்த நோக்கம் நிறைவேறவில்லை. காரணம் அந்த கால்வாய்கள் வழியே செல்லும் மழைநீர் இறுதியாக பக்கத்தில் உள்ள ஏதேனும் ஓர் நீர் நிலையில் சேர்ந்து கலப்பது போல திட்டமிடவில்லை. அப்படியே அரைகுறையாக



நிற்கிறது பல இடங்களில்! மற்றும் பல இடங்களிலோ அவற்றை குப்பைகளை போட்டு மழை நீர் இறங்காதவாறு மக்கள் அடைத்துள்ளனர்.

இன்னொன்று நீர் நிலைகளை, குறிப்பாக ஆறுகள், ஏரிகள், குளங்கள் மற்றும் அவற்றின் வரத்து, போக்குக் கால்வாய்களை எந்த வரைமுறையும் இன்றி ஆக்கிரமித்து, அரசியல் பலத்தோடு பன்மாடிக் கட்டடங்களைக் கட்டியுள்ளதன் காரணமாகவும் இப்படி சாலைகளில் தண்ணீர் தேங்குகிறது. வீடுகளுக்குள் வெள்ளம் புகுகிறது. முன்பு 200 மீற்றர் அகலத்தில் ஓடிக் கொண்டிருந்த அடையாறு, கூவம் மற்றும் பக்கிங்காம் கால்வாய் ஆகியவற்றின் இருகரைகளையும் மறித்து, ஆற்றின் அகலத்தையே அடைத்து நான்கில் ஒன்றாக, அதாவது 200 மீற்றர் அகல ஆற்றை வெறும் 60 மீற்றராகக் குறுக்கிவிட்டனர். மேலும், ஆற்றின் கரையில் பூங்காக்களையும் நடைபயிற்சி பாதைகளையும் அமைக்கின்றனர். இது மிகத் தவறாகும். இத்துடன் கட்டடக் கழிவுகளையும் வீட்டுக் கழிவுகளையும் குப்பைகளையும் கொட்டி ஆற்றின் ஓட்டத்தையே தடுத்த பாவத்திற்கான விலையைத் தான் நாங்கள் கொடுத்துக் கொண்டிருக்கிறோம்.

**இவையெல்லாம் ஒரு பக்கம் இருக்க நமது மாநகராட்சியின் திட்டமிடலிலேயே பிரச்சினைகள் இருப்பதாக கருதுகிறீர்களா?**

ஆமாம். சென்னை மாநகராட்சி, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் மற்றும் மாநில நகர மற்றும் ஊராட்சி திட்ட இயக்கம் முதலியவற்றின் திட்டமிடலிலும் அதை நடைமுறைப்படுத்துவதிலும் கூட தவறுகள் உள்ளன. விதி மீறல்களுடன் நகரின், அதுவும் புறநகர்களின் தாழ்வான பகுதிகளில் வளர்ச்சி என்ற பெயரிலும் நகரமயமாக்கல் என்ற பெயரிலும் பல லட்சக்கணக்கான வீடுகளை, பன்மாடிக் கட்டடங்களைக் கட்டுவதை எந்தவித பொறுப்புணர்வு மற்றும் சமுதாய அக்கறையின்றி வேடிக்கை பார்த்த நிர்வாக குற்றத்தை என்னென்பது?

**வருடம்தோறும் மழைக் காலங்களில் சென்னை இப்படி பாதிக்கப்படுவதை தவிர்க்க முடியாதா? இதற்கு நிரந்தர தீர்வுதான் என்ன?**

சென்னை உயர்நீதிமன்ற அறிவுறுத்தல்களின்படி நீர் நிலைகளை ஆக்கிரமிக்கக் கூடாது, ஆக்கிரமித்துக் கட்டப்பட்ட கட்டுமானங்களை பாரபட்சமின்றி இடித்துத் தள்ள வேண்டும். ஏரிகள், கண்மாய்களின் நீர்வழித்தடங்களை அடைப்போர் மீது உடன் நடவடிக்கை எடுத்து தடுத்திட வேண்டும். அரசியல் தலையீடுகள், குறுக்கீடுகளை மீறி இது எந்தளவு சாத்தியம் என தெரியவில்லை.

ஆளும் கட்சியினர் ஐஏஎஸ், ஐபிஎஸ் அதிகாரிகளை வைத்து எல்லாவற்றையும் சாதித்துவிடலாம் என்ற எண்ணத்தை மாற்றி, இனிமேலாவது திட்டமிடல்களில் பாசனப் பொறியாளர்களின் ஆலோசனைகளை பெற வேண்டும். வெளி நாடுகளில் திட்டமிட்டு செய்திருப்பதைப் போல மழை நீரை தரைக்கு அடியே சுரங்கப் பாதை அமைத்து கொண்டுபோய் ஒரு நீர் தேக்கத்தில்விட வேண்டும்!

சென்னையைச் சுற்றியுள்ள 10 முதல் 20 புறநகர்ப் பகுதிகளில் நிலம் காலியாக உள்ள இடங்களில் பத்து லட்சம் கன அடி முதல் 100 மில்லியன் கன அடி வரை கொள்ளளவு கொண்ட சுரங்க நீர் தேக்கத் திட்டத்தைத் திட்டமிட்டு முனைப்பாகச் செய்திட வேண்டும். மேலை நாடுகளிலும் வளர்ந்த கீழை நாடுகளிலும் இத்தகைய சுரங்க நீர்தேக்கத் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு இன்றும் பயன்பாட்டில் உள்ளன.

சென்னையில் உள்ள செம்பரம்பாக்கம், பூண்டி, புழல் மற்றும் சென்னையைச் சுற்றி செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் உள்ள பெரிய ஏரிகளை கணக்கெடுத்து அவற்றை ஒரு மீற்றர் ஆழப்படுத்தலாம், கரைகளை ஒரு மீற்றர் உயர்த்தலாம். இதன்மூலம் கூடுதல் தண்ணீரை சேகரிக்க முடியும். மழைக் காலங்களில் சென்னைக்கு வெளியே இருந்து நகருக்குள் வரும் தண்ணீரின் அளவை குறைக்க முடியும். இதையும் பல ஆண்டுகளாக அரசுக்கு ஆலோசனையாக சொல்லி வருகிறோம். ஆனால், அரசியல்வாதிகளுக்கும் அதிகாரிகளுக்கும் மறைமுக வருமானத்துக்கான வாய்ப்பு குறைவுள்ள இந்த திட்டங்களில் ஆர்வம் செலுத்துவதில்லை. இதுதான் எங்களுடைய மிகப்பெரிய சாபக்கேடு.

சென்னை கடல் மட்டத்துக்கு இணையாக இருக்கிறது, இவ்வளவு பெரிய மழையை எதிர்பார்க்கவில்லை என்று ஏதாவது காரணம் சொல்லுகின்றனர். 1000 வருடங்களாக இப்படித்தானே இருக்கிறது. இவர்கள் ஆக்கிரமிப்பு செய்து பணத்தை சுருட்டிக்கொண்டு இயற்கை மேல் பழி போடுகிறார்கள். இப்போது வானிலை ஆய்வு மையம் சரியாக முன்னெச்சரிக்கை செய்யவில்லை என்று அதனை சாடுகின்றனர். ஆட்சியாளர்கள் மாறினாலும், இவர்களிடம் இருந்து இதுபோல் விளக்கங்கள் தான் வரும் தீர்வுகள் கிடைக்காது. ஆனால் மக்கள், விளக்கங்களை அல்ல தீர்வுகளையே எதிர்பார்க்கின்றனர்.


MATH & PHYSICS TUTORING

By a well-qualified and experienced teacher
For all grades from Grade 4 to 1st year of university

Special classes
- Advanced function
- Calculus & vectors
- Data management

All Classes available in Scarborough & Stouffville



Mr. S.F. Xavier (Teacher)

Contact: 647.340.9490 / 416.732.2228

## BASEMENT FOR RENT

**MARKHAM & DENISON**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, 2 parking & laundry. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.201.1222**

**MORNINGSIDE & SHEPPARD**
1 bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking & laundry. Avail. January 05, 2024.
தொடர்புகளுக்கு: **647.241.2872**

**MORNINGSIDE & MCNICOLL**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, 1 parking. Close to all facilities. Couple /Small family preferred. Avail. immediately.
**416.613.1792 / 437.260.6478**

**SCAR.GOLF CLUB & ELLESMERE**
2 Bedrooms bsmt for rent . Sep. entrance, parking & laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.419.7873**

**MORNINGSIDE & OLD FINCH**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, free wifi & laundry. Female / couple preferred. Avail. February 01, 2024.
தொடர்புகளுக்கு: **416.321.1015**

**MARKHAM & LAWRENCE**
Walk-out bsmt for rent. Avail. February 01, 2024.
தொடர்புகளுக்கு: **647.667.0482**

**MEADOWVALE & SHEPPARD**
3 Bedrooms Bsmt for rent. Sep. entrance & laundry. Students or family preferred. Close to U of T. Avail. immediately.
**647.717.1699 / 437.518.3286**

**MARKHAM & BUR OAK**
3 Bedrooms bsmt for rent. Sep. entrance, parking & laundry. Close to mount joy go station. Avail. January 01, 2024.
தொடர்புகளுக்கு: **905.350.5005**

**WHITES ROAD & TAUNTON**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, sep. Laundry, 1 parking & brand new kitchen. Close to all facilities. Avail. immediately.
**416.893.5342 /416.999.8998**

**MARKHAM & ELSON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking & laundry. Close to access the bus, schools & all facilities. Avail. February 01, 2024.
**647.530.2816 / 905.472.5654**

34 ஆவது ஆண்டில்
விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com

## BASEMENT FOR RENT

**MIDLAND & EGLINTON**
2 bedroom basement for rent. Sep. entrance & parking. Near Elementary school, TTC, sub way & tamil supermarket. Avail. immediately.
**647.909.3765/416.755.8397**

**MORNINGSIDE & FINCH**
2 Bedrooms bsmt for rent. 2 Washrooms, laundry & 2 parking. Couple/students/family preferred. Close to TTC, Eraa supermarket & all facilities. Avail. immediately.
**647.781.4266 / 647.914.7245**

**NEILSON & MCLEVIN**
1 Bedroom bsmt with spacious living room for rent. Full bathroom, sep. entrance & 1 parking. Available February 01, 2024.
தொடர்புகளுக்கு: **416.625.6733**

**MORNINGSIDE & SEASON DR.**
1 bedroom basement for rent. Washroom, Kitchen & parking. Female preferred. Avail. immediately. தொடர்புகளுக்கு:
**647.532.9378/416.244.4580**

**MARKHAM & STEELES**
1 bedroom bsmt for rent. Sep. entrance, rent includes utilities, 1 car parking & laundry. Close to TTC, mall & school. Avail. immediately.
**Call Rajah: 416.917.0557**

**NEILSON& MORNINGSIDE**
1 bedroom bsmt for rent. Sep. entrance, parking & laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.502.9432**

**TAUNTON & BURKHOLDER**
2 bedroom bsmt for rent. Sep. entrance & parking. Close to bus & all facilities. Avail. immediately.
**416.299.3529/647.808.3529**

**MARKHAM & LAWRENCE**
3 bedrooms bsmt for rent. Sep. entrance, 2 full washroom, parking & laundry. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416. 271.5420**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & SEWELLS**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, parking & laundry. 131 bus stop infront of the house. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.805.8791**

**PHARMACY & ELLESMERE**
2 Bedrooms bsmt for rent. 1 washroom, shared Laundry & 2 parking. Rent $1950 + Utilities 30%. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.558.2228**

**HOOVER PARK DR. & 10TH LANE STOUFFVILLE**
1 bedroom bsmt Apt. for rent. Sep. entrance, parking & laundry. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.830.0472**

**MARKHAM & DENISON**
3 bedrooms brand new bsmt for rent. Sep. entrance, parking & laundry. Avail. immediately.
**437.995.8245/647.202.8933**

**Highway 7 & 9th line, Markham**
2 bedroom bsmt apt. for rent. Sep. entrance. Female students /couple professionals preferred. No pets.
தொடர்புகளுக்கு: **647.636.9089**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & STAINES**
3 bedrooms bsmt for rent. 2 Full washroom, Sep. entrance, laundry & parking. Close to school & bus stop. Avail. immedietely.
**416.988.2448 /647.385.2447**

## BASEMENT FOR RENT

**MARKHAM & DENISON**
3 Bedrooms Look-out bsmt for rent. 1 full washroom, 1 powder washroom, Sep. entrance, sep. laundry & parking. Close to all facilities. Couples/ small family prefered. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.770.7963**

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

## ROOM FOR RENT

**MIDDLEFIELD & FINCH**
1 bedroom for rent. Sep. entrance. Close to TTC. Working/student Male preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.707.6095**

**MARKHAM & DENISON**
1 large bedroom with attached washroom for rent. 2 Male pre ferred. Rent $1400. No alcohol, no smoking & no pets. Avail. immediately.
**647.507.2148/647.864.1051**

**BRIMLEY & EGLINTON**
1 bedroom for rent in a bsmt. Sep. entrance. Working / students preferred. Avail. February 01, 2024.
தொடர்புகளுக்கு: **647.404.7225**

**WARDEN & FINCH**
1 bedroom with sep. bathroom for rent in a condo. Ladies or seniors preferred. Close to Bridlewood Mall, TTC & all other facilities. Avai. Immediately.
தொடர்புகளுக்கு: **416.271.1727**

**MARKHAM & ELLESMERE**
Room for rent in the two bedroom basement. Avail. immediately. Wifi available.
தொடர்புகளுக்கு: **647.996.6977**

**MORNINGSIDE & SHEPPARD**
1 bedroom for rent in a house. parking, free wifi & including utilities. Ladies preferred. Close to U of T, TTC & all other facilities. Avai. Immediately.
தொடர்புகளுக்கு: **647.785.1292**

**MIDDLEFIELD & FINCH**
1 Room in a basement for rent. Sep. entrance, laundry & parking. Also 1 room for rent in main floor. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.531.2495**

**FINCH & NEILSON**
1 bedroom for rent. Female preferred. Wifi included. Close to Eraa supermarket & all facilities. Avail. Immediately.
தொடர்புகளுக்கு: **647.710.1971**

**9TH LINE & 14TH AVENUE**
Room for rent. Parking, laundry & internet. Close to YRT & all other facilities.
**416.648.1987 / 416.669.3549**

மேலும் பக்கங்கள் 13,14, 15

## ROOM FOR RENT

**MORNINGSIDE & SHEPPARD**
1 Bedroom for rent. Shared washroom, kitchen & laundry. Close to access the bus & all other facilities. Female student preferred. Avail. January 01, 2024.
தொடர்புகளுக்கு: **647.580.9424**

**KENNEDY & EGLINTON**
2 Bedrooms in a 3 bedrooms bsmt for rent. Sep. entrance, shared kitchen & shared washroom. Male preferred. Close to Kennedy subway. Avail. Jan. 01, 2024.
தொடர்புகளுக்கு: **647.938.8525**

**WARDEN & FINCH**
2 Bedrooms for rent in a Condo. Ladies preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416. 271.5420**

**MIDDLEFIELD & FINCH**
1 Bedroom for rent in a condo. Shared kitchen, laundry, internet & Sep. washroom. Female only. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.988.4508**

**MCCOWAN / MCNICOLL**
**1 Room for rent in a house. Only Seniors / ladies.** Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647 823 3667**

## BASEMENT FOR RENT

**MCCOWAN & HIGHGLEN**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, parking. Close to bus, schools & HWY 407. Avail. January 01, 2024.
தொடர்புகளுக்கு: **416.540.1475**

## BASEMENT FOR RENT

**BRIMLEY & SHEPPARD**
2 bedrooms bsmt for rent . Sep. entrance, sep. laundry & parking. No smoke & no pets. Close to scarborough center. Avail. January 01, 2024.
**905.789.6979/ 647.203.4692**

## BASEMENTS FOR RENT

**MEADOWVALE & ELLESMERE**
1.5 Bedroom, Sep. entrance, parking & laundry. Couple or small family preferred.
**BARRIE** - 1 Bedroom, Sep. entrance, Parking & laundry. No pets/no smoking. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.770.8482**

மேலும் பக்கங்கள் 12,14,15

## HOUSE FOR RENT

**HWY 401 & HARMONY ROAD**
3 Bedrooms house for rent. & 1 Bedroom apt. for rent. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.554.6872**

**KENNEDY & EGLINTON**
3 bedrooms house for Rent. Parking. Avail. Immediately.
**416.463.1822 / 416.833.7729**

**MARKHAM & STEELES**
4 bedroom house for rent. 2 full washroom + 1 bathroom, 2 parking. TTC bus stop infront of the house.
**416.829.3212/416. 319.3370**

**WARDEN & LAWRENCE**
1 Bedroom apartment available - Back split house. Sep.entrance, Living room, washroom & kitchen. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.708.3444**

**WARDEN & LAWRENCE**
1 Bedroom/ 2 Bedrooms available with living room, washroom & Kitchen. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.708.3444**

## BASEMENT FOR RENT

**MARKHAM & 14TH AVE.**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, sep. laundry & parking. No smoke & no pets. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **437.829.3730**

## BASEMENT FOR RENT

**AJAX & PICKERING**
3 bedrooms newly renovated legal bsmt for rent. 2 full washroom, Sep. entrance, parking & Sep. laundry. Close to HWY 401 & school. Avail. immediately.
**647.896.1239/647.769.1239**

## BASEMENT FOR RENT

**VICTORIA PARK & ELLESMERE**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, living room, kitchen & Laundry. Close to TTC & parkway mall. Suitable for 2 people.
தொடர்புகளுக்கு: **416.420.9394**

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

## BASEMENT FOR RENT

**PHILLIP MURRAY AVE. & STEVENSON ROAD**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, living room, kitchen, washroom, laundry & 1 Parking. Available immediately.
தொடர்புகளுக்கு: **647.894.9714**

## BASEMENT FOR RENT

**WESTNEY & ROSSLAND (AJAX)**
Newly renovated 2 Big bed rooms bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.834.2794**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & MCNICOLL**
2 Bedrooms bsmt for rent. Sep. entrance, parking & Sep. laundry. Close to TTC & all other facilities. Couple preferred. No smoking & no pets. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.722.5519**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & FINCH**
2 bedrooms bsmt for rent. Sep. entrance, 1 parking & laundry. The buses runs across to the house. (939, 953 & 133)
தொடர்புகளுக்கு: **416. 669.9254**

## ROOM FOR RENT

**MARKHAM & LAWRENCE**
Room for rent. Close to all facilities. Avail. January 01, 2024.
தொடர்புகளுக்கு: **647.721.0838**

## ROOM FOR RENT

**NEILSON & TAPSCOTT**
1 Room for rent in a 2 bedrooms condo. Female students preferred. Close to all facilities. Avail. Immediately.
தொடர்புகளுக்கு: **647.771.3054**

## BASEMENT FOR RENT

**14TH AVE. & 9TH LANE**
3 bedrooms Brand new bsmt for rent. 2 washroom, Sep.entrance, 3 parking & laundry. Close to school. Avail. January 01, 2024.
**416.258.8253/416.824.9667**

## BASEMENT FOR RENT

**MARKHAM & ELLESMERE**
3 Bedrooms bsmt for rent. Sep. entrance, sep. laundry & parking Close to all facilties. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.505.9250**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & ELLESMERE**
3 Bedroom bsmt with 1.5 washroom for rent. Sep. entrance, parking & laundry. Avail. immediately. Steps to school, 24 hrs. TTC & U of T.
தொடர்புகளுக்கு: **416.540.5853**

## BASEMENT FOR RENT

**BAYVIEW & MULOCK**
1 bedroom Bsmt for rent in near South Lake hospital. Sep. entrance, parking. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **289.231.6620**

## ROOM FOR RENT

**MIDLAND & EGLINTON**
1 bedroom in a 2 bedrooms condo. for rent. ONLY working or studying female. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.880.2932**

## ROOM FOR RENT

**KENNEDY & CASTLEMORE**
மார்க்கம் பேஸ்மெண்ட் அறை வாடகைக்கு உண்டு. Rent $650. 2 அறை கொண்ட Unit முழுவதும் $1250. Furnished kitchen, washroom, shared laundry with one Parking. மகளிர் மட்டும்.
தொடர்புகளுக்கு: **416.994.9411**

## ROOM FOR RENT

**KIPLING & REXDALE**
1 bedroom for rent in a basement. Sep. entrance, rent includes utilities & high internet. Parking & laundry. Close to TTC. No pets/no smoking. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.407.1778**

## ROOM FOR RENT

**MIDLAND & STEELES**
1 bedroom for rent. Attached washroom.
தொடர்புகளுக்கு: **416.908.6810**

## வாடகைக்கு

**4 BR, 3 BR, 2 BR, 1 BR Full House, Condo, Basement & Business Units**

**647-861-8240**

## CONDO. FOR RENT

**MCLEVIN & NEILSON**

2 Bedrooms condo. for rent. 2 washroom, balcony, living room, laundry room, kitchen & 1 parking. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **647.970.8392**

## TRANSPOTATION SERVICE

AZ Driver available for US running & TAXI Service available for anywhare in Canada.

Contact: **416.627.7059**

## SPN HOUSE CLEANING

வீடுகளில் Cleaning செய்வதற்கு ஆட்கள் தேவைப்படுவோர் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு: **416.896.7250**

## HOUSE FOR RENT

**HWY 407 & DONALD COUSENS**

2 bedrooms coach house for rent. Close to HWY 407, GO Station & other facilities. Avail. March 01, 2024.

தொடர்புகளுக்கு: **647.862.7056**

## HOUSE/BASEMENT FOR RENT

**ROSSLAND & CHURCH (AJAX)**

4 bedrooms, 3 washroom & 3 parking house for rent.

**MORNINGSIDE & SCARBOROUGH**

2 bedrooms, 1 washroom bsmt for rent.

தொடர்புகளுக்கு: **416.509.7247**

## CLEANING JOB

**BARRIE**இல் அமைந்துள்ள Industrial Officeஇல் பணி யாற்றுவதற்கு வேலையாள் தேவை.

**Full Time –** 7:00 am - 3:00 pm

தொடர்புகளுக்கு: **647.640.4050**

## JOB VACANCY

**HOME CARE WORKER**

Full-time live-in caregiver for a senior in Markham needed. For more details call.

**647.986.6659**

## HOUSE FOR RENT

**BROCK ST. & VICTORIA ST.**

3 Bedrooms Town house for rent. 3 Washroom, 2 parking. Close to HWY 401 & whitby go station in 5 min. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **647.862.7111**

## HOUSE/BASEMENT FOR RENT

**TAPSCOTT & CROWTRAIL**

1 Bedroom basement for rent.

STAINES & MORNINGSIDE

2 Bedroom walkout basement for rent. 3 Bedrooms house for rent.

**Contact: 647.686.8590**

## வேலைக்கு ஆட்கள் தேவை

**NEWMARKET**

பகுதியில் **Cleaning** வேலைக்கு ஆட்கள் தேவை.

தொடர்புகளுக்கு: **647.308.7221**

## முதியோர் பராமரிப்பு

**Personnel support workers service, House cleaning & Transpotation.**

**416.930.3134/437.263.6302**

## HOUSE FOR RENT

**MARKHAM & ELLESMERE**

**3 bedrooms & 1 full washroom bungalow house main floor for rent. Bus 5 minutes walking distance, school, bank, mall, HWY 401 & other facilities. Avail. February 01, 2024.**

தொடர்புகளுக்கு: **647.996.6977**

## HOUSE FOR RENT

**16th AVENUE & CORNELL CENTER BLVD.**

3 Bedrooms house for rent. 2 washrooms & parking. Close to HWY 407, Go Station & all other facilities. Avail. February 01, 2024.

தொடர்புகளுக்கு: **647.862.7056**

## வேலைக்கு ஆள் தேவை

சிகை அலங்கார நிலையம் ஒன்றிற்கு தொழில் அனுபவமுள்ள வேலையாள் தேவை. (Barber)

தொடர்புகளுக்கு: **416.880.4829**

## HOME CARE (வீட்டுப் பராமரிப்பு)

**PERSONAL SUPPORT WORKERS** சேவை வழங்கப்படும்.

**647.701.9809**
**437.782.8776**

## மணமகன் தேவை

கனடா ரொறொன்ரோவில் தொழில் புரியும் இலங்கை யாழ்ப்பாணத்தைப் பூர்வீகமாகக் கொண்ட 36 வயது விவாகரத்தான, குழந்தைகளற்ற பெண்ணுக்கு கனடாவில் வாழும் மண மகனை உறவினர்கள் தேடுகின்றனர்.

தொடர்புகளுக்கு: **416.841.5035**

## மணமகன் தேவை

கனடாவில் வாழும் 38 வயதான **(Graduated in Medical office Administration)** பெண்ணுக்கு மணமாகாத 38 - 42 வயதுள்ள மணமகனைத் தேடுகிறோம்.

**416.551.9737/ 647.937.1243**

## BASEMENT / HOUSE FOR RENT

**BIRCHMOUNT & LAWRENCE**

3 bedrooms Bungalow house for rent. 1 washroom, Parking & laundry. Close to all facilties.

2 bedrooms bsmt for rent. Sep. entrance, Parking & laundry. Students / small family preferred. Avail. immediately.

தொடர்புகளுக்கு: **647.637.5345 /647.637.5344**

## BASEMENT / ROOM FOR RENT

**MORNINGSIDE & MCNICOLL**

1 bedroom walkout bsmt for rent. Sep. entrance, washroom & internet. Students / small family preferred.

1 bedroom for rent. Sep. washroom. female preferred.

Avail. immediately. Close to bus stop, school & all facilities.

தொடர்புகளுக்கு: **437.984.6029**

## HOUSE / BASEMENT FOR RENT

**HWY 401 & 4TH UNION**

3 bedrooms Bungalow house for rent. 1 washroom, 2 Parking & laundry. Close to all facilties.

1 bedrooms bsmt for rent. Sep. entrance, 1 parking & laundry.

Avail. immediately. வீடு, Bsmtஇனை தனித்தனியாகவோ அல்லது ஒன்றாகவோ பெற்றுக் கொள்ள முடியும்.

தொடர்புகளுக்கு: **647.408.7125– Please Text**

## BASEMENT / HOUSE FOR RENT

**McCOWAN & ALTON TOWERES CIRCLE**

2 bedrooms Basement for rent. Avail. immediately.

**KENNEDY & HWY 401** – 2 bedrooms condo. for rent. 1 Parking, Avail. immediately.

தொடர்புகளுக்கு: **416.836.0010**

## ROOM FOR RENT

**MORNINGSIDE & SEWLLES**

**Multiple bedrooms available with bathroom & kitchen.**

தனித்தனி அறைகளாகவும் கொடுக்கப்படும்.

**Close to TTC (2 Buses). Contact owner about renting price.**

தொடர்புகளுக்கு: **416.908.9494**

## BASEMENT / HOUSE FOR RENT

**SCARBOROUGH**
**Upper unit** – 3 bedrooms & 1.5 washrooms
**Basement** – 2 bedrooms & 1 washroom
**OSHAWA**
4 + 1 bedrooms and 3 full washroom
**Please call: Chandru– 416.984.2426**

## HOUSE / BASEMENT FOR RENT

**WHITES ROAD & TAUNTON**

புத்தம் புதிய **4 Bedrooms Town house** (9-foot ceiling), 2.5 Washrooms, 2 Parking, பஸ் வசதி மற்றும் ஏனைய வசதிகளுடன் உடனடியாக வாடகைக்கு உண்டு.

புத்தம் புதிய 1 **Bedroom walkout Bsmt** (9-foot ceiling) உடனடியாக வாடகைக்கு உண்டு. Sep. entrance, sep. laundry, kitchen, 1 washroom & 1 parking.

தொடர்புகளுக்கு: **416.668.8187**

## ENGLISH TUTORING

**JK – High school students**
Confidence and public speaking focused class.
**Adult** - Aspiring to develop basic conversational skills.
1 to 1 virtual class / Group class
Please message **647.919.3970** for details.




## JOB VACANCY

**Experienced Baker (Full time)**
$20 per hour for qualified Candidates.
**Required Skills**
* Specialized in Sri-Lankan traditional baked goods.
* Must be fluent in English and Tamil language.


Chris Bread Bakery Ltd, 2617 Eglinton Ave. East, Scarborough ON, M1K 2S2
**Sheron – 416.562.4897/ Chris Bread Bakery LTD – 416.267.4897**
**Email: ChrisBakery@gmail.com**

## CONDO. & HOUSE FOR RENT

**MARKHAM & ELLESMERE** – 3 bedrooms Condo for Rent. 2 washroom, 1 parking. Avail. immediately.
**OSHAWA** - 4 bedrooms detached House for Rent. 2 washrooms, 3 parking. Close to University & other facilities. அறைகள் தனித்தனியாகவும் கொடுக்கப்படும்.
**PETERBOROUGH** - 4 bedrooms detached House for Rent. 2 washrooms, 3 parking, Avail. immediately. தொடர்புகளுக்கு: **647.702.2159**

## BENTON AUTO DETAILING

**BENTON CAR WASH**
**Winter package starting from $49 & 2nd time service 10% off.**
தொடர்புகளுக்கு: **416 768 1001**
**1080 TAPSCOTT ROAD**



# யோக சோதிடம்

கிரகப்பொருத்தம் பார்த்தல் சுபமுகூர்த்தம் கணித்தல்
சாதகக் குறிப்புக் கணித்தல் பலன் பார்த்தல்

தொடர்புகளுக்கு: 416.299.8361

# Office Administrator (Invoicing and Administrative Support)

**Office Administrator (Invoicing and Admin Support)**

**Responsibilities:**

- Manage invoicing using QuickBooks accurately and efficiently.
- Reconcile accounts, track payments, and resolve discrepancies.
- Provide admin support: data entry, filing, and documentation.
- Handle professional email correspondence promptly.
- Create reports using Excel for financial records and office tasks.
- Collaborate closely with management for financial activities.

**Requirements:**

- 3+ years in office administration, specializing in invoicing, QuickBooks, and Excel.
- Advanced proficiency in QuickBooks and Excel is a must.
- Excellent English communication skills for emails.
- Strong organizational and problem-solving abilities.
- Team player with adaptability in a dynamic work setting.

**Application Process:**

**Send resume and cover letter to info@topspotjanitorial.ca, detailing relevant experience and suitability for the role.**

# CONDO. FOR RENT / SALE

**1) Downtown Condo. for Assigment Sale.**
Brand new beautiful 1 bedroom + Den with 1bathroom Suite in the newly-built community by Broccolini. Walkout to the balcony from living/ kitchen. High end modern steel appliances, stone countertops, tiles backsplash, track lighting, floor to ceiling windows, smart home control.

**2) Condo. for Rent In Mississauga Near to Square one Mall**
Eglinton & Hurontario 2 bedrooms with 1washroom. Around 1050 Square feet in a luxury park mansion condo. Indoor swimming pool, Tennis Court etc.

**3) House for Rent – 9th lane & 14th Avenue in Markham**
4 Bedrooms and 3 washrooms with a big kitchen, living room & car parking. Close to School, Bus stop, Hwy 407 & shopping stores. No pets, No smoking. Available from 1st January 2024.
**Pl. Contact: 416–918–9848 / 416–857–7603**

# RENOVATION

- Plumbing
- Painting
- Electric
- Tiles
- Basement
- Hardwood
- Laminating
- Kitchen
- Landscaping
- Interlock








ஆகிய வேலைகள் செய்து கொடுக்கப்படும். அழையுங்கள்

**Dinesh: 647.625.2239**

**drsharvin15@gmail.com**





## For your Special Occasions

**SHORT TERM RENTAL**

**TORONTO**

Large House available for your Special Occasions Short Term Rental in Scarborough. Daily rental possible.
If Interested email :
georgeparan1@gmail.com



வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

மேலும் பக்கங்கள் 12,13,14,15

## WPM Property Management

Unit #210 – 80 Corporate Dr, Scarborough, ON, M1H 3G5

**Available for Rent**

***Brampton*** **– Dixie Rd/Countryside Rd - Bsmt**
(1Brm + 1Bath) **[$1,650/m]**

***Brampton*** **– Mcvean/Castlemore - Bsmt**
(1+1Brm + 1Bath) **[$1,750/m]**

***Toronto*** **– Windmere/The Queensway - Townhouse**
(3Brm + 3Bath) **[$4,300/m]**

***Toronto*** **– Prot Union/Lawrence – Townhouse**
(3+1Brm + 2Bath) **[$13,000/m]**

***Markham*** **– HWY 7/Birchmont – Condo**
(2Brm + 2Bath) **[$3,200/m]**

***Markham*** **– McCowan/Denison – Bsmt**
(2Brm + 1Bath) **[$2,200/m]**

**Available for Rent**

***Pickering*** **– Whitevale Rd/Mulberry Lane - Detached**
(4Brm + 4Bath) **[$3,400/m]**

***Pickering*** **– Simcoe /Conlin - Detached**
(4+2Brm + 4Bath) **[$3,450/m]**

***Ajax*** **– Audely Rd S/Bayly St E - Detached**
(4Brm + 4Bath) **[$4,200/m]**

***Oshawa*** **– Simcoe St N/Adelaide Ave E – Bungalow**
(3Brm + 2Bath) **[$2,600/m]**

***Porthope*** **– Walton St/Ontario St– Apartment**
(2Brm + 1Bath) **[$1,999/m]**

***Quinte West*** **– HWY 2/ 2nd Dug Hill Rd – Detached**
(3+2Brm + 3Bath) **[$3,200/m]**

* வீட்டின் விலைகள் தற்போது இறங்கியுள்ளன. ஆனாலும் வாடகை கூடிக் கொண்டே போகிறது.

* நீங்கள் ஒரு வீட்டைத் தற்போது வாங்கி வாடகைக்கு விடுவதன் மூலம் நன்மையடையும் சந்தர்ப்பம் இருக்கிறது.

* வாடகைக்கு கொடுத்த பின் வாடகையை பெறுவதில் சிரமமிருந்தால் அதை ஈடுகட்ட எமது நிறுவனம் (Watson Property Management) **Rental Guarantee** வாடகைக்கான உத்தரவாதத்தைத் தருகின்றது. விபரங்களை அறிய தொடர்பு கொள்ளலாம்.

**Real Estate & Property Management** துறையில் 32 வருடங்கள் அனுபவமுள்ளவரைத் தொடர்பு கொள்ளலாம்.

**கரு கந்தையா - 416.616.7278 Watson Property Management - 416.284.9999**

**We are managing Condos, Houses, Apartments in the area of Toronto, Markham, Ajax, Whitby, Oshawa, Clarington, Brampton, Hamilton, Beaverton, Trenton, and Kingston.**

# கனடாவில் பாவலர் பாலரவியின் கவிதை நூல்கள் வெளியீட்டு விழா

## குரு அரவிந்தன்

இங்கிலாந்தில் இருந்து வருகை தந்திருந்த பாவலர் பாலரவியின் கவிதைத் தொகுப்புக்கள் 24-12-2023 அன்று ஸ்காபரோவில் உள்ள 110, 'அயன்சைட்; கிறசன்ற் (110 Ironside crescent) மண்டபத்தில் வெளியிட்டு வைக்கப்பட்டது. கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்த நிகழ்வில் 'தெளிந்தபின் தெளிந்தவை,' 'எண்ணங்களின் வண்ணங்கள்,' 'வாழ் வாங்கு வாழ்ந்தோர்க்கும் வாழ்வோர்க்கும் வாழ்த்துகள்,' 'தேசமேயாகிய சுடர்கள்,' ஆகிய நான்கு கவிதைத் தொகுப்புக்கள் வெளியிட்டு வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வுக்கு கனடா தமிழ் எழுத்தாளர் இணையத் தலைவர் கவிஞர் அகணி சுரேஸ் அவர்கள் தலைமை தாங்கினார். வாழ்த்துரை வழங்கிய பேராசிரியர் இ. பாலசுந்தரம் அவர்கள் தனது உரையில் கவிஞர் பாலரவியின் தங்கை சசிகலா தனது மாணவி என்றும், புலம்பெயர்ந்த மண்ணில் தமிழ் வளர்க்கும் இவர்களைப் போன்றோரின் தன்னலமற்ற சேவை பாராட்டப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

கனடா தமிழ் எழுத்தாளர் இணையத் துணைத்தலைவர் குரு அரவிந்தன் தனது உரையில் பாவலர் பாலரவி அவர்களை 2018ஆம் ஆண்டு முதன் முதலாகச்



சந்தித்ததாகவும், கனடாவில் புலம்பெயர்ந்த தமிழர் கடந்த 33 வருடங்களாகத் தமிழ் மொழியை வளர்ப்பதில் ஈடுபாடு கொண்டி ருப்பதைப் போலவே பிரித்தானியாவிலும் பாவலர் பாலரவி போன்றோர் தமிழ் மொழியைத் தக்கவைப்பதில் ஈடுபட்டிருப் பதையும், அங்கே அச்சகம் ஒன்றை நடத்தி அதன் மூலம் தமிழ் நூல்களை வெளியிட்டுத் தமிழ்த் தொண்டு ஆற்றுவது பற்றியும் குறிப்பிட்டார்.

ஒன்ராறியோ மாகாணசபை உறுப்பினர் லோகன் கணபதி அவர்கள் மாகாணசபை சார்பாக வாழ்த்து மடல் கொடுத்து வாழ்த்தினார். கனடா கவிஞர் கழகத் தலைவர் குமரகுரு மற்றும் கவிஞர் கஜன் ஆகியோரும் வாழ்த்துரை வழங்கினர்.



அகணி சுரேஸ் அவர்கள் தனது தலைமை உரையில் கனடா எழுத்தாளர் இணையம் இதுபோன்ற நூல்களை வெளியிட்டு, எழுத்தாளர்களை ஊக்கு வித்து வருவதையும், முடிந்தளவு தமிழ் இலக்கிய நூல்களை ஆவணப்படுத்து வதில் முன்னிற்பதாகவும் குறிப்பிட்டார்.

நூல் அறிமுகவுரை, ஆய்வுரை ஆகியவற்றை வாசுகி நகுலராஜா, நகுலேஸ்வரி குமரகுரு, வைத்திய கலாநிதி மேரிகியூரி ஜோசெப், பவாணி தர்மகுலசிங்கம், கவிஞர் கஜன், ராஜ்மீரா இராசையா, சிவவதனி பிரபாகரன், மாவிலிமைந்தன் சண்முகராஜா ஆகியோர் வழங்கினர்.

ஏற்புரையில் பாவலர் பாலரவி அவர்கள் அவ்வப்போது தான் எழுதிய கவிதை களைத் தன்னிடம் அச்சகம் இருந்ததால் நூல்களாக்க முடிந்ததாகவும், இளமைப் பருவத்தில் எழுதிய கவிதைகள் அத்தனை யும் 1983ஆம் ஆண்டு இலங்கையில் நடந்த இனக்கலவரத்தில் அழிக்கப்பட்டு விட்டதாகவும் குறிப்பிட்டார்.

பாவலர் பாலரவியின் சார்பாக அவரது சகோதரிகளான திருமதி ரஜனி சதானந்தன், திருமதி கிரிஜா மோகனதாஸ் ஆகியோர் நன்றியுரை வழங்கினர். நிகழ்ச்சிகளை அவரது சகோதரி சசிகலா ஜீவானந்தன் சிறப்பாகத் தொகுத்து வழங்கினார்.

---

# அங்கே உள்ளதை அனுபவியுங்கள்

## (அங்கே உள்ளது எதுவோ அதை அனுபவியுங்கள்)

**Words of Peace**

பிறேம் ராவத் பற்றி மேலும் அறிந்துகொள்ள:

**www.timelesstoday.com**

**www.premrawat.com**

**Experience what is there**

" நீங்கள் ஓர் அனுபவத்தை உருவாக்க முயற்சிக்கவில்லை. ஆனால் ஏற்கனவே அங்கே உள்ள ஒன்றை அனுபவிக்க முயற்சிக்கிறீர்கள்."

உங்களை அறிந்துகொள்வது பற்றியும் எவ்விதம் செழிப்படைவதென்று கற்றுக் கொள்வது பற்றியதொரு எளிமையான உண்மை. - பிரேம் ராவத்

மக்கள் மெய் அறிவை சந்தேகிக்கின்ற னர். அது மிக எளிமையானது. நீங்கள் என்ன செய்கிறீர்கள், உங்கள் கவனத்தை உங்கள் உள்ளே செல்ல இடமளியுங்கள். அனுபவம் ஒன்றை உருவாக்க நீங்கள் முயற்சிக்கவில்லை. ஆனால் ஏற்கனவே அங்கே உள்ள ஒன்றை அனுபவிக்க முயற்சிக்கிறீர்கள்.

சந்தேகம் சக்திவாய்ந்ததொன்று. நீண்ட காலத்திற்கு முன்னர், "சந்தேகத்திற்கு இடமளிக்காதீர்கள்" என நான் கூறினேன். இது 2020. (இப்போது 2024) அதை நான் மீண்டும் கூறுவேன். "சந்தேகத்திற்கு இடம் கொடுக்காதீர்கள்", அதை தெளிவினால் நிரப்புங்கள்: அறிந்து கொள்ளுங்கள். "அறியாமல்" இருக்காதீர்கள். அறிந்து கொள்ளுங்கள். நீங்கள் யார் என்பதை அறிந்து கொள்ளுங்கள், தெரிந்து கொள்ளுங்கள். உங்களின் உள்ளே இருப்பதை அறிந்து கொள்ளுங்கள்,செழித்தோங்குங்கள்.உயிர் பிழைத்திருத்தல் போதும் என்னும் நிலையில் இருந்து வெளிவாருங்கள்.

எவ்வளவோ விடயம் சாத்தியமாகலாம். உங்களில் சிலர் வயது முதிர்ந்தவர்களாகி விட்டீர்கள் என்பது எனக்குத் தெரியும். ஆகவே, ஏற்கனவே, உங்களுக்கு என்ன நடைபெறப்போகிறது என்பதை அறிவதில் நீங்கள் ஆவலாக இருக்கிறீர்கள்.

இது ஆண்டுகளின் எண்ணிக்கையை பற்றியதல்ல. அந்த ஆண்டுகளில் என்ன நடைபெறுகிறது என்பதுதான் விடயம். உங்களுக்கு ஒன்று எஞ்சியிருந்தால் அதை முடிந்தளவு பிரயோசனப்படுத்திக் கொள்ளுங்கள். அதில் அரைவாசி எஞ்சியிருந்தால் அதை முடிந்தவரை பிரயோசனப்படுத்திக் கொள்ளுங்கள். உங்களுக்கு ஒரு நாள் எஞ்சியிருந்தால் முடிந்தவரை அந்தநாளைப் பிரயோசனப் படுத்திக் கொள்ளுங்கள். அந்த மனப்பாங்கை கைக்கொள்வதை விட உங்களுக்கு வேறெந்தத் தெரிவுமில்லை. இது இதைவிட வேறு எந்த விதமாகவும் இருக்க முடியாது. உங்களுக்கு இது தெரியவில்லையா? அது வேறு எந்த விதமாகவும் இருக்க முடியாது. அது அப்படித்தான் இருக்க வேண்டும்.

"உங்களுக்குத் தெரியுமா? நான் இப்பொழுது அதி புத்திசாலியாக இருக்கிறேன். ஆகவே மேலும் 45 வருடங்கள் வாழ விரும்புகிறேன் என உங்களால் கூற முடியாது. சரிதானே. அந்த விவாதத்தில் நீங்கள் வெற்றிபெறப் போவதில்லை. உங்களின் அந்த விருப்பத்தை நிறைவேற்றுவதற்கு அங்கு எந்த சன்ரா க்ளோஸும் (கிறிஸ்மஸ் தாத்தாவும்) இல்லை. உங்களின் அந்த விருப்பத்தை நிறைவேற்றுவதற்கு உங்களால் செய்யக் கூடியதெல்லாம் நடைபெறுவது எதுவோ அதை உங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதுதான். எதை உங்களால் கட்டுப்படுத்தமுடியும், எதை உங்களால் கட்டுப்படுத்த முடியாது என்பதை அறிந்துகொள்ளுங்கள்.

எரிபொருள் வழங்குவதைக் கட்டுப்படுத்த உங்களால் முடியும். எஞ்ஜினின் இரைச்சலை உங்களால் கட்டுப்படுத்த முடியாது. நீங்கள் எரிபொருளைச் செல்ல விட்டால் அது இரைச்சலை ஏற்படுத்தும். எரிபொருளைச் செல்ல விடாதீர்கள். அதைத்தான் நீங்கள் கட்டுப்படுத்துகிறீர்கள்.

அது ஒரு பொருட்டல்ல. உங்கள் உள்ளே போங்கள். உள்ளே போவதற்குத் தயாராக இருங்கள். உள்ளே போவதற்கு நீங்கள் எவ்விதம் தயாராவீர்கள்? உங்கள் உள்ளே உள்ள அந்த அழகான விடயங்களால் ஈர்க்கப்படுவதால். பயமெதுவும் இருக்காத நிலைக்குச் செல்வீர்கள். அந்த நிலையில் பொறாமை எதுவுமிருக்காது. அந்த நிலையில் ஐயம் ஏதும் இருக்காது. புரிகிறதா? அங்கேதான் மெய்யறிவு உங்களை எடுத்துச் செல்கிறது.

உங்களையே கேளுங்கள் அந்த இரைச்சல்களை அல்ல. உங்களையே கேளுங்கள். உங்களது உள்ளம் எதனை கூறுகின்றதோ அதனைக் கேளுங்கள். நீங்கள் தான் உங்களது வாழ்க்கைக்குப் பொறுப்பு. இது உங்களது வாழ்க்கை. இது உங்களது சந்தர்ப்பம். நிறைவாக இருங்கள். ஒவ்வொரு நாளும் திருப்தியாக இருங்கள்.

இதனைதான் நான் கூற விரும்பினேன். ஏதோ ஒரு சிறிய வழியிலே இது உங்களுக்கு உதவி செய்யும் என நம்புகின்றேன். இது ஒரு நினைவூட்டுத லாக இருந்தால் நினைவூட்டுதலாக இருக்கட்டும். சிலருக்கு இது ஒரு புதிய செய்தியாக இருந்தால் புதிய செய்தியாக இருக்கட்டும். நான் சோகமாகவே இருக்க வேண்டும், நான் ஆனந்தமாக இருக்க வேண்டும் என ஒருபோதும் எண்ணியதில்லை என இருந்தால் அப்படி இருக்கத் தேவையில்லை. எனவே உங்களைப் பொறுத்தளவில் எதுவாக இருந்தாலும் வாழுங்கள். உயிர் வாழுங்கள். செழிப்பாக வாழுங்கள். தவிர்க்க முடியாததை உங்களால் மாற்ற முடியாது.

ஆனால் இப்பொழுது மூச்சு உங்களின் உள்ளே வருகிறது. நன்றி உள்ளவராக இருங்கள். உங்களையே நீங்கள் கேளுங்கள். நன்றி.



# கண்ணீர் அஞ்சலி

## அமரர் பாவலர் அருட்கவி ஞானகணேசன் தம்பிஐயா

அமரர் பாவலர் அருட்கவி ஞானகணேசன் தம்பிஐயா அவர்கள் டிசம்பர் 27, 2023 காலை சிவபதம் அடைந்தார் என்ற செய்தி கேட்டு மிகவும் வருந்துகின்றோம்.

இலங்கையில் பொலிஸ் உத்தியோகத்தராகக் கடமையாற்றிய காலத்தில் தாயகத்தில் ஏற்பட்ட நிலைமையின் காரணமாக கனடாவிற்குப் புலம்பெயர்ந்து கனடாவில் குடிசார் பொறியியல் துறையில் புலமை பெற்று திட்ட ஒருங்கமைப்பாளராக குடிசார் பொறியியல் ஆலோசனை நிறுவனம் ஒன்றில் பணியாற்றி வந்தார்.

வரசித்தி விநாயகர் ஆலயத்தில் முக்கிய தொண்டராக விளங்கினார். இயல்பாகவே பாடும் திறனும், கலை ஆர்வமும் கொண்ட அவர் வரசித்தி விநாயகருக்கான பாடல்களை எழுதி இசைத்தட்டாகவும் வெளியிட்டார். வரசித்தி பிரதம குருக்களால் அருட்கவி என்ற பட்டத்தைப் பெற்றார். முன்னாள் இலங்கை தமிழ் பொலிஸ் உத்தியோகத்தர் கழகத்திலும் முக்கிய பதவிகளை ஆற்றி வந்தார்.

கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையத்தில் அமரர் பண்டிதர் ம.செ.அலெக்ஸ்சாந்தர், கவிநாயகர் வி.கந்தவனம் ஆகியோர் நடத்திய யாப்பிலக்கண வகுப்பில் இணைந்து செவ்வனே கற்று கவிஞர் எண்மரில் ஒருவராக மரபுக்கவிஞராகப் பவனி வந்தார். தனது இரண்டு ஆசான்களிடமும் அளவற்ற குருபக்தி கொண்டவராக விளங்கினார். தன்னோடு யாப்பிலக்கணம் பயின்ற கவிஞர்களுடன் நல்ல நட்புடன் பழகி வந்தார். எப்போதும் கலகலப்பாகவே பழகும் இயல்பு கொண்டவராக விளங்கினார்.

சந்தமுடன் பாடல் எழுதுவதிலும், கும்மிப் பாடல்களை விரும்பி எழுதுவதிலும், அரங்கம் மகிழ சந்தத்துடன் படிப்பதிலும் வல்லவராக விளங்கினார். வாழ்த்துப்பாக்கள் எழுதுதல், கண்ணீர் அஞ்சலி எழுதுதல், திதி வெண்பாக்கள் எழுதுதல், கல்வெட்டுக்கள் எழுதுதல், இசைப்பாடல்களை எழுதி வெளியிடல், கவிதைத் தொகுதி நூல்களை எழுதி வெளியிடல் போன்ற செயற்பாடுகளில் அதிக ஆர்வம் கொண்டு செயற்பட்டார். தனது கவிதை நூலினை தமிழகத்திலும் வெளியிட்டு பல தமிழகக் கவிஞர்களின் பாராட்டினையும் பெற்றார்

கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையத்தில் இணைந்து பொருளாளர், நிர்வாகசபை உறுப்பினர் போன்ற பதவிகளை வகித்துச் சிறப்பாகப் பணியாற்றினார்.

கனடாத் தமிழ்க் கவிஞர் கழகம் இவருக்கு பாவலர் விருதும் வழங்கி மதிப்பளித்திருந்தது. தனது துணைவியாருடன் இணைந்து திருமணசேவையினையும் வழங்கி வந்தார். ஆன்மீக ஈடுபாடு கொண்டவராகவும், சிறந்த கவிஞராகவும்,



நூலாசிரியராகவும், கலைஞராகவும் பாடலாசிரியராகவும், சமூக சேவையாளராகவும், எல்லோருடனும் அன்புடன் பழகி வந்தவர் அருட்கவி ஞானகணேசன்.

கனடாவிலிருந்து வெளிவரும் பல பத்திரிகைகள் ஊடாகவும், வானொலிகள், தொலைக்காட்சிகள் ஊடாகவும் இவரது சந்தச்சிறப்பு மிக்க கவிதைகள் வெளிவந்தன.

அமரர் அருட்கவி ஞானகணேசன் குடும்பத்தினர், உற்றார், உறவினர், நண்பர் அனைவருக்கும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிக்கின்றோம். அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

## அறிந்திருங்கள்

* மாத்திரை எடுக்கும்போது குளிர்ந்த நீரில் சாப்பிடாதிருங்கள்.
* மாலை 5 மணிக்கு மேல் கடினமான உணவை தவிர்த்து விடுங்கள்.
* பகலில் அதிகமாகவும் இரவில் குறைவாகவும் நீர் அருந்துங்கள்.
* இரவு 10 மணிமுதல் 4 மணி வரை தூங்குவதை முடிந்தவரை நடைமுறைப்படுத்துங்கள்.
* உணவு உண்டதும் உறங்காதீர்கள்.
* மொபைல் போனில் சார்ஜ் மிகவும் குறைவாயிருக்கும் நிலையில் உபயோகப் படுத்தாதீர்கள் கதிர் வீச்சு 1000 மடங்கு அதிகரிக்க வாய்ப்பிருக்கிறது.

# அண்ணன் அருட்கவிக்கு இதய அஞ்சலி



அன்பும் பண்பும் அகத்தே நிறைத்து
என்றும் பிறர்க்கு உதவிட எண்ணிச்
செயல்புரி வீரனாய்ச் செகத்தினில் மிளிர்ந்த
வியத்தகு மாந்தன் விண்ணுல கேகினான்

ஞான கணேசன் நாமம் கொண்டே
ஞானமாய் ஞால நற்பணி புரிந்து
தமிழும் சைவமும் தழைக்க உழைத்துத்
தமிழர் விழுமியம் தக்கதாய்க் காத்தோன்

இன்செரலும் கொடையும் இணைய வாழ்ந்து
பன்முகத் திறமைகள் பல்வழி காட்டி
கவிதை நாடகம் கனதியாய் வில்லிசை
செவிகள் குளிரச் செய்தீர் எம்முடன்

பாவோ சையெனும் படைப்புவா னொலியில்
நாவோ சைத்தே வாரதி ருவாசகம்
நாடிடும் நற்பலன் நல்கிடும் பாடலும்
தேடியே பதிப்பித் தார்தா னுமெழுதி

இயலிசை நாடகம் இணைந்த தமிழை
இயல்புடன் நன்றே இன்புடன் கற்று
பயின்றவ ழியின்பம் பிறரும் பெற்றிட
தயக்கமில் உழைத்தார் தரணியோர் மெச்சவே

அருட்கவி எனவே ஆலயத் தோரளி
மெருகூட் டுபட்டம் மதிக்கத் தாங்கியோன்
இறையடி சேர்ந்தனன் எனுந்தக வலால்நாம்
உறைந்து நைந்துள முருகித் தவிக்கிறோம்


கவிஞர் கழக குடும்ப உறுப்பினன்
புவியிற் தமிழனாய் பிறந்த மகிழ்வுடன்
இன்முகங் காட்டி இறைபோற் பிறரையும்
தன்னுள் மதித்தவர் தரணியில் வாழ்வரே!

அவரான்மா இன்பாய் இறையுடன் இணையப் பிரார்த்திக்கிறோம்.

- கனி மீரா -

# உன்னுள் உறைந்த இறைவனைத் தேடி உலகெலாம் அலைவதேன் உறவுகளே?

## வெண்பா



இறைவனைத் தேடி இகமெலாம் ஓடி
உறைவிடம் காணா உறவே - புறத்தே
அலைந்துமே புண்ணியம் இல்லையே ஆறி
அகத்திலே காண்பாய் அருள்!
ஆயிரம் பூசைகள் அர்ச்சனை எதற்கு
பாயிரமும் பண்ணும் எதற்கப்பா - நீயிருந்து
அங்கமும் சிந்தையும் ஆழ்ந்து உருகிட
பொங்கும் இறையுரு பார்!

வேண்டுத லாயிரம் வேள்வி களாயிரம்
மாண்டுமே செய்தென்ன மானிடா - ஆண்டவன்
உன்னுள் இருப்பதை ஊன்றி உணரிடேல்
என்னதான் புண்ணியம் எண்?
யாத்திரை செய்தென்ன யாகமும் செய்தென்ன
நேத்திகள் வைத்தும் நெருங்குவையோ? - கூத்தன்தான்
நாத்திகன் நெஞ்சிலும் நன்றே உறைகிறான்
ஆத்மிக உண்மையே ஆம்.
தேடிப்பார் தேவனை தேகத்துள் ஒன்றான
ஆடித் துடிக்கும் இதயத்துள்- மாடி
மனையிலோ மற்றெவ் இடத்திலோ காணா
தனியின்பம் காண்பாய் தணிந்து.

அருட்கவி த. ஞானகணேசன்

# புரட்சிக் கலைஞர் ‘கப்டன்’ விஜயகாந்த் காலமானார்

பிரபல திரைப்பட நடிகரும், தே.மு.தி.க நிறுவனத் தலைவருமான விஜயகாந்த், உடல்நலக் குறைபாடு காரணமாக 28.12.2023 தனது 71ஆவது வயதில் உடல் நலக்குறைவு காரணமாக காலமானார்.

‘கப்டன்’ விஜயகாந்த் என்று அழைக்கப்படும் இவர் மிகச் சிறந்த மனிதநேயப் பண்பாளர், திரைப்பட நடிகர், தேமுதிக நிறுவனர், தமிழ்நாடு சட்டமன்றத்தின் முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர், நடிகர் சங்கத் தலைவர் என தான் ஈடுபட்ட துறைகளில் திறம்பட செயல்பட்டவர்.



மறைந்த தே.மு.தி.க தலைவர் விஜயகாந்தின் உடல் பொதுமக்கள், கட்சித் தொண்டர்கள், அரசியல் பிரமுகர்கள், திரையுலக பிரபலங்கள் இறுதி அஞ்சலி செலுத்தும் வகையில் தீவுத்திடலில் வைக்கப்பட்டு தே.மு.தி.க தலைமைக் கழக வளாகத்தில் உடல் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளது.

பிரதமர், மத்திய அமைச்சர்கள், முதலமைச்சர், மற்றும் மற்றைய மாநில முதலமைச்சர்கள், திரைப் பிரபலங்கள் எனப் பலரும் இரங்கல் தெரிவித்திருக்கின்றனர்.

பொதுச் சேவையில் மிகுந்த ஆர்வம் கொண்ட இவர், மக்களின் வாழ்க்கை மேம்பாட்டிற்கான அவரது நேர்மையான அர்ப்பணிப்புக்காக அவர் நினைவுகூரப்படுவார். தம்மை நாடி வந்த மக்கள் அனைவருக்கும் பசியாற உணவளித்த மனிதநேயவாதி.

ஈழப்போராட்டத்துக்கு முழுமையான ஆதரவை வழங்கியவர். ஈழம் கிடைக்கும் வரை தான் பிறந்தநாள் கொண்டாடுவதில்லை என்ற முடிவை எடுத்திருந்தார். விடுதலைப் புலிகளின் தலைவர் மீது அதீத அன்பு கொண்ட விஜயகாந்த், தனது மகனுக்கு விஜய பிரபாகரன் என்று பெயர்வைத்தவர். இலங்கையிலிருந்து அகதிகளாக சென்ற ஈழத்தமிழருக்கு உணவளித்துள்ளார்.

‘கப்டன்’ விஜயகாந்த் அவர்களின் புகழ் என்றென்றும் நிலைத்திருக்கும்.

# பிரேமலதா விஜயகாந்த் அரசியல் எதிர்காலம் எப்படியிருக்கும்?

## நேர்காணல்: ஊடகர் சாவித்திரி கண்ணன் நேர்கண்டவர்: கண்ணன்

மருத்துவமனையில் தீவிர சிகிச்சைப் பிரிவில் இருந்த விஜயகாந்தை அடுத்த சில நாட்களிலேயே தேமுதிக கட்சி பொதுக்குழு, செயற்குழு கூட்டத்துக்கு அழைத்து வந்து, மேடையில் இருவர் பிடித்தவாறே உட்கார்த்தி வைத்து, தன்னை கட்சியின் புதிய பொதுச் செயலாளராக அறிவித்துக்கொண்டார், பிரேமலதா விஜயகாந்த். தமிழ்நாட்டின் ஆளும் கட்சியாக வாய்ப்புள்ள கட்சி என்று கணிக்கப்பட்ட தேமுதிக இன்று தலைவர் இல்லாமல் திண்டாடுகிறது. பிரேமலதா விஜயகாந்த் தலைமையில் கட்சி மீண்டும் பலம்பெற வாய்ப்புள்ளதா? இது தொடர்பாக தமிழக அரசியல் விமர்சகரும் மூத்த ஊடகருமான சாவித்திரி கண்ணன் நமக்கு பேசினார்.

**விஜயகாந்தை உடல் நலமில்லாத நிலையில் இருவர் பிடித்துக்கொண்டே மேடையில் உட்கார வைத்தது கண்டனத்துக்கு உள்ளாகியுள்ளது. மிகவும் பலவீனமாக, பார்க்கவே பரிதாபமாக இருந்தார், விஜயகாந்த். அவரை வைத்து படம் இயக்கிய இயக்குநர் பாண்டிராஜ், ‘கேப்டனை இப்படி கஷ்டப்படுத்தாதீர்கள்’ என்று கூறியிருக்கிறார். நீங்கள் எப்படி பார்க்கிறீர்கள்?**

தேமுதிக புதிய பொதுச்செயலாளராக தன்னை அறிவித்துக்கொள்ள பிரேமலதாவுக்கு இருக்கும் ஒரே வாய்ப்பு இதுதான். விஜயகாந்த் இல்லாமல் இதை செய்திருந்தால் தொண்டர்கள் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். விஜயகாந்துக்கு விருப்பம் இல்லை என்றுகூட அவர்கள் நினைக்கலாம். எனவேதான் பிரேமலதா இதை செய்துள்ளார். அவருக்கு வேறு வழி இல்லை என்றுதான் நினைக்கிறேன்.

**விஜயகாந்த் இப்படி மேடைக்கு வந்து தொண்டர்களைப் பார்த்தால் அவர் மனம் உற்சாகமடையும், உடல்நிலை சீராகும் என்று பிரேமலதா ஆதரவாளர்கள் கூறுகிறார்கள். இது ஏற்றுக்கொள்ளக் கூடிய கருத்தா?**

உண்மையிலேயே அப்படி நடந்தால் நல்லதுதான். ஆனால், அதற்கு வாய்ப்பு இருக்குமா என்று தெரியவில்லை.




**பிரேமலதா தலைமையில் தேமுதிகவின் எதிர்காலம் எப்படியிருக்கும்?**

2016 சட்டசபை தேர்தலோடே அந்தக் கட்சியின் எதிர்காலம் முடிந்துவிட்டது. இனி அதற்கு எதிர்காலம் இல்லை.

2005ஆம் ஆண்டு தேமுதிக தொடங்கப் பட்டபோதே மூட நம்பிக்கைகளின் முழு வடிவம், குடும்ப ஆதிக்கம், குழப்பம், கோமாளித்தனம் ஆகியவற்றின் மொத்தக் கலவையாக இந்தக் கட்சி ஆரம்பிக்கப் பட்டுள்ளது என நான் எழுதினேன். ஒன்றுக்கொன்று முரண்பாடான தேசியம், திராவிடம் இரண்டையுமே கட்சிப் பெயராக்கிய கோமாளித்தனம் போதாது என்று அதில் முற்போக்கு என்று தனக்கு முற்றிலும் பொருந்தாத வார்த்தையையும் கட்சிப் பெயரில் இணைத்தார், விஜய காந்த். ஆனாலும், ஆரம்ப காலத்தில் அவரது வளர்ச்சி அபரிமிதமாகத் தான் இருந்தது. சினிமா தந்த பிரபலம், அவர் செய்த தான தர்மங்கள், அவருக்கேயுரிய அசாத்தியமான தைரிய குணம், உற்ற நண்பர்களின் சேர்க்கை ஆகியவை அவரது அரசியல் வெற்றிகளுக்கு அடித் தளமாகின. இரு திராவிட இயக்கத்தையும் ஏற்க முடியாத மனநிலை கொண்ட தமிழக வாக்காளார்களில் ஒரு பகுதியினர் இதை ஒரு மாற்றாகக் கருதி ஆதரித்தனர்.

கட்சி தொடங்கிய அடுத்த ஆண்டே 234 தொகுதிகளில் வேட்பாளர்களை நிறுத்திய துணிச்சலும், கடும் பிரச்சாரங்களும் அவருக்கு 2006 தேர்தலில் 8% சதவீத வாக்குகளை பெற்றுத் தந்தன. அடுத்து வந்த 2009 நாடாளுமன்ற தேர்தலோ 10.4% வாக்குகளை தந்தன. 2011 தேர்தலில் அதிமுகவுடன் கூட்டணி. கட்சி தொடங்கப்பட்ட ஆறே ஆண்டில் 29 எம்.எல்.ஏக்கள், எதிர்கட்சித் தலைவர் அந்தஸ்து என்பது உடனடி ஆதாயமானது. ஆனால், அதன்பின்னர் இவர் தான் திமுக, அதிமுகவிற்கு மாற்று என்ற வளர்ச்சி தடைபட்டதோடு, அவரது வாக்கு வங்கியும் வீழ்ச்சியடைய ஆரம்பித்தது. தனக்கு யார் எதிரி? யார் நண்பன் என்பதை திட்டவட்டமாக வரையறுக்க முடியாமல் விஜயகாந்த் பயணம் தொடர்ந்தது.

இன்னொரு பக்கம்; அரசியல் அனுபவமின்மை, அதீத கோப உணர்ச்சி ஆகிய வற்றொடு குடும்ப உறவுகள் தலையீடும் சேர்ந்ததால் தன் கட்சி எம்.எல்.ஏ.க்கள் எட்டு பேரை அதிமுகவிடம் பறி கொடுத்தார். மூத்த தலைவர் பண்ருட்டி ராமச்சந்திரனும் அவரிடமிருந்து விலகினார்.


2016 தேர்தலில் தேமுதிகவானது திமுக அணிக்கு வந்திருந்தால் தேர்தல் முடிவுகளே மாறியிருக்கும். 2011இல் அதிமுக - தேதிமுக கூட்டணிக்கு சோ போன்ற ஓர் இணக்கமான இடைநிலை தரகர் அமைந்தது போல, 2016இல் அமையாமல் போனது. ஸ்டாலினுக்கும் விஜயகாந்தை ஏற்க முடியவில்லை. இந்நிலையில், மக்கள் நலக் கூட்டணி என்ற வலையில் விஜயகாந்த் விழுந்த போது கட்சிக்குள் கொஞ்ச நஞ்சம் இருந்த வலுவான நிர்வாகிகளான சந்திரக்குமார், பார்த்தீபன் உள்ளிட்ட பலரை இழந்தார். அவரது வாக்கு வங்கி 2.4% சதவீதமானது. மக்கள் நலக் கூட்டணி என்று அத்தனை கட்சி களை சேர்த்துக் கொண்டு நின்றபோதே, நின்ற 104 தொகுதிகளில் 103இல் டெபாசிட் பறிகொடுத்த கட்சி தேமுதிக.

2019இலும் அது தமிழகத்தில் எது வெற்றிக் கூட்டணி என்பதை கணிக்கும் திராணியில்லாத அளவுக்கு பாஜகவின் பாசவலையில் சிக்கியது. அது மேலும் வாக்கு வங்கியை சரித்துவிட்டது. இப்போது தேமுதிகவின் வாக்கு வங்கி 0.5%க்கும் குறைவாகத்தான் இருக்க முடியும்.

ஒன்னும் இல்லாமலே எப்படி கெத்து

(தொடர்ச்சி 20ஆம் பக்கம்...)

# கனடாவின் கல்வி வரலாறு




## கனடாவின் பூர்வீகக்குடிகளும் கல்வியும் - 2

உலகெலாம் ஐரோப்பியர்கள் தங்கள் ஆதிக்கத்தைச் செலுத்துவதற்காக மேற்கொண்ட நடவடிக்கைகள் அந்தந்த நாடுகளில் பெரும் மாற்றங்களைக் கொண்ட வரலாறாகப் பதிவாகியுள்ளது. உலக நாடுகளில் ஏற்பட்டது போன்றே கனடாவின் வரலாற்றிலும் கறைபடிந்த நிலைமைகள் காணப்படுகின்றன. நீண்ட காலமாக இந்த மண்ணின் உரித்தாளர்களாக வாழ்ந்த பழங்குடியினரின் வரலாறும் மிகமோசமான இன அழிப்பினை எதிர்நோக்கிய கறைபடிந்த வரலாறாகும். கீழைத்தேச நாடுகளுக்கான கடல்வழிப் பாதையைக் கண்டுபிடிப்பதற்காக ஸ்பெயின், பிரான்ஸ், ஒல்லாந்து, போர்த்துக்கல், பிரித்தானியா போன்ற நாடுகள் போட்டி போட்டுக்கொண்டு புறப்பட்டதன் விளைவாக வடஅமெரிக்கத் தீவுகளைக் கண்டுபிடித்தமையும் அதன் பின்னர் வட அமெரிக்கா, தென் அமெரிக்கா எனக் கண்டுபிடித்து அவற்றைத் தத்தம் அதிகாரத்திற்குள் கொண்டுவர பிரஞ்சு நாட்டினர், போர்த்துக்கேயர், ஸ்பானியர், பிரித்தானியர், ஒல்லாந்தர் என பல்வேறு நாட்டினரும் போட்டி போட்டுக்கொண்டனர்.



இதன் வழியாக வட அமெரிக்காவில் குறிப்பாக கனடாவில் முதலில் தமது கால்பதித்தோர் வரிசையில் பிரஞ்சுக்காரர் முன்னணி வகித்தனர். அதன் பின்னர் கனடாவிற்குள் பிரவேசித்த பிரித்தானியர் தமது படைபலத்தின் காரணமாக அதிக பரப்பளவான இடங்களைக் கைப்பற்றியதோடு தங்கள் நாட்டிலிருந்து மக்களை இங்கு குடியேற்றவும் முனைந்தனர். இதனால் பரம்பரை பரம்பரையாக இருந்து வந்த பழங்குடியினரின் தொழில் வாய்ப்புகளும், நிலங்களும் அந்நியர் கைகளில் சிக்கிக்கொண்டன.

கிறிஸ்தோபர் கொலம்பஸ் வந்தபோது வட அமெரிக்காவில் 100 மில்லியன் மக்கள் வாழ்ந்ததாகப் பதிவிடப்பட்டுள்ளது. ஆனால் பத்தொன்பதாம் ஆண்டின் முடிவில் பழங்குடியினரில் 99 வீதமானோர் அங்கு இல்லாத நிலைமையே ஏற்பட்டிருந்தது. அவர்கள் அழித்து ஒழிக்கப்பட்டனர் என்றே கொள்ளக்கிடக்கின்றது. தப்பிப் பிழைத்தோர் வடக்கே சென்றுள்ளனர். பழங்குடியினரிடையே 566 இனக்குழுமங்கள் காணப்படுவதாக அமெரிக்க ஆய்வு ஒன்று காட்டுகின்றது. செவ்விந்தியர் எனவும் எஸ்கிமோர் எனவும் அழைக்கப்படும் பழங்குடியினரின் வாழ்வாதாரத் தொழில் துறைகளில் மாற்றங்கள் ஏற்படத்தொடங்கியதோடு ஐரோப்பியரின் வருகையின் காரணமாக அவர்கள் தங்கள் இடங்களை விட்டு பாதுகாப்புத்தேடி வேறு இடங்களுக்குச் செல்லவேண்டிய நிலையும் ஏற்பட்டது. அமெரிக்க சுதந்திரப் போருக்கு முந்தைய காலகட்டத்தில் வட அமெரிக்கா எங்கும் பரந்து வாழ்ந்த பழங்குடியினரை அழித்தொழிக்கும் நிலைமை கட்டவிழ்த்து விடப்பட்டது. தங்கள் ஆதிக்கத்தை ஏற்றுக் கொள்ளாத எந்த ஒரு செவ்விந்தியரையும் விட்டுவைப்பதில்லை என்னும் நோக்கோடு அழித்தொழிக்கப்பட்டனர். அவர்களின் நிலங்கள் பறித்தெடுக்கப்பட்டன. இன்று இனங்காணப்பட்டுள்ள இன்னுயி, அல்கொங்குவா போன்ற இனக் குழுவினர் தமக்கே உரிய பாரம்பரிய மருத்துவம், தொழில் வழிக் கல்வி என்பனவற்றைக் கொண்டிருந்தனர். இவர்கள் ஐரோப்பியரால் 'எஸ்கிமோவர்' என்னும் பெயரால் சற்றுத் தாழ்த்தப்பட்டோர் என்னும் கருத்தில் வெள்ளை இனத்தவர்கள் இவர்களிலும் மேலானோர் என்ற கருத்தினைக் கொண்டிருந்தனர். இதனால் அவர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொண்டனர். வந்தேறு குடிகளான ஐரோப்பியரை எப்பொழுதும் இந்த நிலத்தில் வாழ்ந்து வந்த பழங்குடியினர் எதிர்த்தே வந்துள்ளனர். இதனால் இவர்களை அழித்தொழிப்பதிலும் அடக்கியாளுவதிலும் ஐரோப்பிய ஆக்கிரமிப்பு வாதிகள் முனைப்புக்காட்டினர்.

தொடரும்...

# பிரேமலதா...

19ஆம் பக்கத்தொடர்ச்சி

காட்டுவது என்பதற்கு இன்று தேமுதிகவை மிஞ்ச நாட்டில் வேறு கட்சி இல்லை. காலி பெருங்காய டப்பா எப்படியும் கொஞ்ச நாளைக்கு வாசனை வீசிக்கிட்டுத் தான் இருக்கும். ஆனால், சமையலுக்கு பயன்படாது. அது போலத்தான் தேமுதிக. அந்தக் கட்சியை தமிழக மக்கள் எப்போதோ அரசியலில் இருந்து அப்புறப்படுத்திவிட்டனர். தேர்தல் என்பதையே பணவசூலுக்கான ஓர் அரசியல் சூதாட்டமாக அர்த்தப்படுத்திக் கொண்டு அலம்பல் செய்யும் பிரேமலதாவின் அரசியல், அஸ்த்தமனத்தை நோக்கி சென்று கொண்டுள்ளது என்பதில் சந்தேகமேயில்லை.

1984இல் எம்.ஜி.ஆர். அமெரிக்காவில் சிகிச்சையில் இருந்தபோது அங்கே அவர் மருத்துவமனையில் இருந்த வீடியோவை அதிமுக இங்கே வெளியிட்டது. தேர்தலில் அதிமுக மக்களின் அனுதாபத்தைப் பெற, வெற்றிபெற அந்த வீடியோ உதவியது. அதுபோல் தற்போது விஜயகாந்த் இருக்கும் நிலையைப் பார்த்து மக்களின், தொண்டர்களின் அனுதாபத்தைப் பெற வாய்ப்புள்ளதா?

எம்.ஜி.ஆர். மீண்டு வந்தார். அதற்கு அவரிடம் இருந்த உறுதி காரணம். அதுபோல் விஜயகாந்த் மீண்டு வருவதற்கு வாய்ப்பில்லை.

எந்த ஒரு கொள்கை இல்லாவிட்டாலும் கூட, அந்தக் கட்சியின் ஒரே ஈர்ப்பு விஜயகாந்த் தான். அவரது படங்கள், அவர் செய்த தான தர்மங்கள், அவரை நேசிக்க கூடிய ஒரு மக்கள் திரள்... இது மட்டுமே தேமுதிகவின் பலம். விஜயகாந்த் தற்போது செயல்படமுடியாத நிலையில் உள்ளார். அவருக்கு தேவைப்படுவது பூரண ஓய்வு. அதுதான் அவருக்கு நல்ல உடல் நலத்தை கொடுக்கும். இனி கள அரசியல் செய்வது அவரது ஆரோக்கியத்திற்கு நல்லதல்ல. இதுவே மக்கள் பார்வையாக உள்ளது. ஒரு தேர்தல் பொதுக் கூட்டத்தில் அவர் பேச முடியாமல் குளறி பேசியதைக் கண்டு தாய்மார்கள் கண்ணீர் வடித்தனர். இந்நிலையில், பிரேமலதா தன் அரசியல் ஆதாயத்திற்காக விஜயகாந்தை வருத்தி, அரசியல் பிரச்சாரத்திற்கு அழைத்து



வருவார் எனில் அது மக்கள் மத்தியில் எதிர்மறை விளைவுகளையே அக் கட்சிக்கு ஏற்படுத்தும்.

ஒவ்வொரு கட்சி உயிர்த்திருக்கவும் ஒரு சமூக, அரசியல் வரலாற்றுத் தேவை இருக்கிறது. ஒரு சித்தாந்தம், கொள்கை கொண்ட குறிப்பிட்ட மக்கள் திரளின் ஆசை, அபிலாசைகள் உள்ளது. அப்படி ஏதாவது இந்தக் கட்சி உயிர் வாழ்வதற்கான சமூக., அரசியல் காரணிகள் ஏதாவது உள்ளதா என்று பார்த்தாலும்கூட விடை ஒன்றும் கிடைக்கவில்லை.

0.5%க்கும் குறைவான வாக்கு வங்கியை வைத்துக்கொண்டு என்ன நம்பிக்கையில் பிரேமலதா கட்சியை தொடர்ந்து நடத்துகிறார்?

பாஜகதான். பாஜகவுக்கு தமிழ்நாட்டில் பலம் இல்லாததால் இதுபோன்ற துக்கடா கட்சிகளின் ஆதரவு தேவைப்படுகிறது. இதனால்தான் நடிகர் விஜயை அரசியலுக்கு கொண்டு வரும் வேலைகளையும் அவர்கள் செய்கிறார்கள். விஜயகாந்த் கட்சி தொடங்கிய போது அவருக்கு வாழ்த்து சொன்ன ஒரே கட்சி பாஜக தான் என்பது குறிப்பிடத்தக்கது. 2014இல் அவர் பாஜக அணியில் சேர்ந்து நாடாளுமன்ற தேர்தலை சந்தித்த காலத்தில் இருந்து பாஜகவின் ஸ்லீப்பர் செல்லாக பிரேமலதா மாறிப்போனார். தேர்தல் என்றால், பெரிய தொகை கிடைக்கும் என்ற ஆசை வந்துவிட்டது. இப்போதும் அந்த ஆசையில்தான் கட்சியை தொடர்ந்து நடத்த திட்டமிடுகிறார்.

# கோவில்



**கட்டளைக் கலிப்பா**

ஆலயம் செல்லல் அகமகிழ் வாமே
ஆங்கு சென்றே ஐயனை வணங்குவோம்
கோல மாமயில் கொண்ட முருகனைக்
கண்ணீர் சிந்தவே களிப்புக் கொள்வோமே
சீலங் காக்கும் சிறந்த இடமாகச்
சென்று வணங்கிச் சிறப்புப் பெறுவோம்
வல்லறி வாளன் வாழிடங் கோயிலே
வந்து வணங்கிட வாழ்வு சிறக்குமே.

கோவி லென்றாலே சிற்றம் பலமாமே
கொற்றவன் அங்கேதான் குடிகொள் வானே
நாவுக் கரசர் நவின்ற தேவாரம்
நாளும் ஓதியே நம்பூ திரியரால்
பூவுந் தண்ணீரும் புனிதப் பொருளால்
பூசைகள் செய்து போற்றி வணங்குவர்
மூவுல கோரும் முறையாய் வந்துமே
முறைசால் நேர்த்தி முறையாய்ச் செய்வரே.

விழாக்கள் பற்பல விடிய விடிய
வியப்பில் ஆழ்த்தும் வித்தகக் கலைகளே
ஆளவிலா ஆனந்தம் அங்கு செல்வோரின்
ஆகமகிழ் வென்றும் ஆற்றலை ஊக்குமே
தளந்தரு பவர்கள் தனவந் தராம்
தக்க நடன நாட்டியம் தானங்கே
இளவய தோரும் இணைந்து கொண்டாமே
இயல் இசை நாடகம் இயல்பாய்ச் செய்வர்.

முருகேசு மயில்வாகனன்